முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 31—7—59 | வெள்ளி | ஒலி: 15



பிற்போக்கு நோக்கங்களுடன் துவங்கப்பட்டிருக்கும் இராசகோபாலாச்சாரியாரின் 'சுதந்திரக் கட்சி'யுடன்

பாலாற்றில் பாலம்—யானைப் பசிக்குச் சோளப் பொரி!

சி. ஜம்பு

பொதுநிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொண்டு கட்சி நலனைக் காப்பாற்றுவதற்கு அடிக்கடி ஊர் சுற்றிவரும் சென்னை மாநில மதி மந்திரிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டிவருவது அன்றாட நிகழ்ச்சியாகி பழங்கஞ்சியாய் புளித்துவிட்டது. கழகத்தை விமர்சிப்பதாய் கருதிக்கொண்டு விம்மும் குரலில் வேதனைக் கீதம் இசைப்பதிலே அமைச்சர்களுக்குள்ளே பலத்த போட்டியிருக்கிறது. குறிப்பாக, மந்திரிகளிலேயே மெத்த மேதாவியான கக்கனரின் கவலையெல்லாம் கழகத்தை எப்படிக் காய்வது என்பதிலேதான். பொருந்துமா பொருந்தாதா என்பது குறித்துக் கிஞ்சித்தும் யோசியாமல் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் கழகத்தைக் கடிந்துரைப்பது அவருக்கு வழக்கமாகி, பெருநோயாய் வளர்ந்துள்ளது.

சென்ற வாரம் இராணிப்பேட்டையில் நடைபெற்ற பாலாற்றுப் பாலத் திறப்புவிழாவில் கக்கனரின், மனக்கடலில் வீசிய கருத்தலைகளை பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது. ஆதாரங்களை அதிகமாக அள்ளி வீசுவதாக எண்ணிக்கொண்டு கக்கனர் கதறியிருக்கிறார். தி. மு. கழகம் பேசும் வடக்குத் தெற்கு வாதம் பொய்; மத்திய சர்க்கார் தென்னாடு உயர்ந்தோங்க நிறைய செலவழிக்கிறது; சான்றாகப் பாலாற்றுப் பாலத்தை 29 லட்சம் ரூபாய் செலவழித்து நிர்மாணித்து சென்னை அரசாங்கத்திற்கு மத்திய சர்க்கார் படைக்கின்றது. எனவே தி. மு. கழகத்தை நம்பாதீர்கள். இப்படியாக கக்கனர் கர்ச்சனை புரிந்துள்ளார்.

போக்குவரத்து வசதிகள் பெருக பாலங்கள் நிறைய அமையவேண்டியது மிக அவசியமாகும். அப்போதுதான் தடங்கலில்லாமல் சாலைப் போக்குவரத்துத் துரிதமாய் நடைபெற வழியுண்டு.

நல்ல பல சாலைகள் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, அடிப்படையான தேவையாகும். விவசாயக் கருவிகள், உரம், விளைபொருட்கள் இன்னோரன்னவைகளைக் கொண்டு செல்ல நல்ல சாதனமாய் சாலைகள் பெரிதும் உதவி, விவசாயத்தைச் செழிப்படையச் செய்கின்றன. பழங்கள், காய்கறிகள், பால், முட்டை முதலான அன்றாடம் தேவைப்படும் பொருட்களை நகரங்களில் விற்று கிராமங்கள் வளம்பெற நல்ல சாலைகள் பயன்படுகின்றன. இரயில்களின் போக்குவரத்துக்கு உதவி, தானும் பலனடைந்து சாலைகள் சிறப்புப் பெறுகின்றன. தொடர்பற்றுத் தேங்கிக் கிடக்கும் பகுதிகளை இணைத்து சமூதாய ஒற்றுமை உயர, நல்லெண்ணங்கள் மலர, புதுமைகள் பரவ சாலைகள் உதவுகின்றன.

எனவே, சாலைகள் நாட்டின் இதயங்களாகும். ஆக சாலைகள் போடப்படுவதும், நல்ல பாலங்கள் அமைக்கப்படுவதும் மகிழ்ச்சி தருவனவாகும். நாட்டு மக்களால் போற்றப்படுவனவாகும்.

ஆனல், இவைகளையெல்லாம் அறிந்தோ அறியாமலோ விடுத்துவிட்டு, தென்னகத்து மக்களின் உள்ளங்களை ஈர்த்து வரும் ஒரு மிகப் பெரிய பொருளாதார உண்மையை உருத்தெரியாமல் மறைக்கப் பாலம் அமைப்பதைப் பயன்படுத்துகின்றார் கக்கன். பாலாற்றுப் பாலத்தை மட்டில் தனியாக எண்ணிப் பார்க்காமல், அது உருவாக வழிகோலிய இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முழுமையாக ஆராய்ந்தால் தி. மு. க. சொல்லிவரும் தெற்கு வஞ்சிக்கப்படும் பொருளாதார நிலையை நன்குணரலாம்.

இந்திய சர்க்காரும், இராஜ்ய அரசாங்கங்களும் 246 கோடி ரூபாய் செலவழித்து, சாலைகளை நிர்மாணிக்கவும் செப்பனிடவும், புதிய பாலங்கள் அமைக்கவும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்திய சர்க்கார் 82 கோடி ரூபாய் செலவழிக்க மீதியை இராஜ்ய சர்க்கார்கள் பயன்படுத்தும். இத்துடன்கூட, மத்திய சாலை நிதியிலிருந்து 25 கோடி ரூபாய் தனியாக செலவழிக்கப்படும்

இராஜ்யங்களை இணைக்கும் பெருஞ்சாலைகள் அமைக்க, தேசியப் பெருஞ்சாலைகள் உருவாக, 35 பெரிய பாலங்கள் நிர்மாணிக்க மத்திய சர்க்கார் மேற்கூறிய 82 கோடி ரூபாயையும் பயன்படுத்தும். 35 பாலங்கள் அமைக்க மட்டில் சுமார் 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் பாலாற்றில் ஒரு பாலம் உருவாகியுள்ளது. இதை உதாரணமாக எடுத்துக்காட்டி, தென்னாடு ஓங்கி உயர்ந்து வளர்கின்றது என கக்கன் குறிப்பிடுகின்றார். 25 கோடி ரூபாயை டெல்லி சர்க்கார் செலவழிக்கும்பொழுது, 86-ல் ஒரு பங்கான 29 லட்சம் ரூபாய் செலவில் பாலாற்றில் ஒரு பாலம் அமைத்தால் தெற்கு வளர்ந்துவிட்டது; கழகம் கூறிவரும் பொருளாதார நிலைமை விளக்கம் தவறானது என விளக்கவுரை நிகழ்த்துவது விந்தையாகும்.

குறைந்தது 2 கோடி ரூபாய் செலவில் தமிழகத்தில் பல இடங்களில் பாலங்கள் மத்திய சர்க்கார் பொறுப்பில் அமையுமானல் அத்துறையிலே தமிழ் நாடு புறக்கணிக்கப்படவில்லை என்று சொல்லுவதிலே நேர்மை இருக்கும்- ஒரே பாலம்தான் உருவாகியுள்ளது. அதற்கே இப்படி கக்கன் கதறினல், மேலும் மேலும் திராவிடம் உரிய வாய்ப்புக்களை வகைகெட்ட முறையில் இழக்கவே துணை புரிந்ததாகும்.

பார்த்தவுடனேயே மனதைப் பறிகொடுத்துக் கண்டபடி வருணிக்கும் நிலைகெட்ட மனிதனின் செயலுக்கும் கக்கனின் போக்கிற்கும் என்ன வேறுபாடிருக்க முடியும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

மேலும், கக்கனர் வடநாட்டைவிட மிக அதிகமான அளவில் தென்னாடு சாலை வளர்ச்சித் துறையில் முன்னேறியுள்ளது என்றும் கூறியுள்ளார்கள். ஆனல் நிலைமை நேர்மாருக உள்ளது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் செலவழிக்கத் திட்டமிட்டுள்ள 82 கோடி ரூபாயும் வடநாடு சாலை முன்னேற்றத்தில் வளர்ந்தோங்கவே பெரும்பாலும் செலவாகின்றது.

அத்துடன், இராஜ்ய சர்க்கார்களுக்காகச் சாலை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள 164 கோடி ரூபாய்களும் நியாயமான முறையில் வேறுபாடின்றி மாநிலங்களுக்கு ஒதுக்கப்படவில்லை தென் இராஜ்யங்களான கேரளம், மைசூர், தமிழகம், ஆந்திரம் ஆகியவைகளுக்கு 23 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க, 141 கோடி ரூபாய்கள் வட மாநிலங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

மக்கள் கணக்கு ரீதியில் திராவிடப் பகுதிகளுக்குக் குறைந்தது 45 கோடி ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஆனல், திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதோ 23 கோடி ரூபாய்தான். இந்த வேதனைதரும் வஞ்சகப் புறக்கணிப்புக்குக் கக்கனுகட்டும், வேறு அமைச்சர்களாகட்டும் என்ன சமாதானம் சொல்லப்போகிறார்கள்?

தமிழகத்தை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டால் சாலை அபிவிருத்திக்காக 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனல், அதே நேரத்தில் பீகாருக்கு பதினேழரை கோடி ரூபாய், பம்பாய் மாநிலத்திற்கு 17 கோடி ரூபாய், மேற்கு வங்காளத்திற்கு 17 கோடி ரூபாய், உத்திரப்பிரதேசத்திற்கு 16 கோடி ரூபாய் தரப்பட்டுள்ளன. இந்தக் கொடூரமான அநியாயத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் விளக்குகின்ற நேரத்தில் வேதனையை, தலைக்குனிவை அணைத்துக் கொள்ளவேண்டிய அமைச்சர்கள் ஆவேசக்குரலில் கழகத்தைக் கண்டிப்பதிலே பொருளில்லை.

தமிழ் மூவேந்தர்கள் காலத்திலிருந்தே தமிழகத்தில் நல்ல பெருஞ்சாலைகள் அமைக்கப்படுவதும், பராமரிக்கப்படுவதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வந்திருக்கின்றன. என்றாலும் காங்ரீட் ரோடுகள், தார் சாலைகள் இவைகளிலே தமிழ்நாடு பின்தங்கியுள்ளது.

இந்திய சர்க்கார் வெளியிடான 'இந்தியாவின் புள்ளி விவரங்கள் கொண்ட சிறு புத்தகம்' எனும் நூலில் கண்டுள்ளவாறு, 1951ம் ஆண்டு நிலவரப்படி, சென்னை மாநிலத்தில் 843 மைல்களே தார் ரோடுகள் இருக்க, பஞ்சாபில் 2344 மைல்கள், உத்திரப்பிரதேசத்தில் 2007 மைல்கள், பீகாரில் 1076 மைல்கள், மேற்கு வங்காளத்தில் 1307 மைல்கள், அஸ்ஸாமில் 1134 மைல்கள் தார் போட்ட சாலைகள் அமைந்துள்ளன. இந்த நிலைமை தமிழ்நாட்டின் தவிப்பை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

இன்றைய தினம் சென்னை மாநிலத்தில் ஒரு சதுர மைலுக்கு 0·48 மைல் நீளம் சாலை இருக்கிறது. இந்தியா முழுமைக்கும் கணக்கெடுத்தால் ஒரு சதுர மைலுக்கு 0 26மைல் நீளம் சாலை அமைந்துள்ளது. இந்தப் புள்ளி விவரத்தை மட்டில் ஆதாரமாய்க் கொண்டு பார்த்தால், இந்திய சராசரி வீதாசாரத்தைவிட தமிழகத்தில் கூடுதலாயிருப்பதால் தமிழகம் சாலைத்துறையில் முன்னேறியுள்ளதாக கூறமுடியும்.

ஆனல், மேற்கு வங்காள நிலைமையோடு ஒப்பிடுப் பார்த்தால் தமிழ்நாட்டின் சாலை முன்னேற்றத்தின் பின்னேற்றத்தைத் தெளிவாய் அறிந்துகொள்ளமுடியும். திரு. வி. வி. இராமனதன் அவர்கள் எழுதியுள்ள 'இந்தியாவில் சாலைப்போக்குவரத்து' எனும் ஆங்கிலநூலில் சென்னைமாநிலம் ஒரு சதுர மைலுக்கு 0.25 மைல் நீளம் சாலை பெற்றிருந்த காலத்தில் வங்காளம் ஒரு சதுர மைலுக்கு 1 4 மைல் நீளம் சாலை கொண்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார். எனவே, சென்னை மாநிலத்தைவிட வடநாடு பெருமளவு சாலைத்துறையில் முன்னேறியுள்ளது.

[தொடர்ச்சி பக்கம்—10]



நக்கீரர் கழகம், மகளிர் மன்றம்—இவைகளின் சார்பில், திருமதி ராணி அண்ணதுரை அவர்கள் 127 ஏழை மாணவ மாணவியருக்கு கரும்பலகை பென்சில் முதலிய பொருட்கள் அன்பளிப்பாக வழங்கியபோது எடுத்த படம் இது. 6—7—59 அன்று நடைபெற்ற அந்த விழாவிற்கு டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ. தலைமை வகித்தார்கள்.

வெள்ளி 31—7—59 சென்னை

புத்தகச் சதி!

'நாலாம்வகுப்புக்குப் பாடப்புத்தகம் வைக்கத் திறனில்லை—இவர்கள் நாடாளப் போவது எங்கே?'—என்று நம்மைப் பற்றிக் கேலி பேசியிருக்கிறார்; குதித்துக் குதித்துக் கெக்கலி கொட்டிச் சிரித்திருக்கிறார், ஒரு அமைச்சர்!

நள்ளிரவில் கள்ளம் புரிந்து, கைப்பிடிச் சுவர்களைத் தரைமட்டமாக்கி, கூரையைப் பிடுங்கிக் கிணற்றில் எறிந்து, குட்டிச் சுவராக்கிவிட்டு இரவோடு இரவாக குடக்கூலிக்காரன் ஓடிவிடுகிறான். அடுத்த நாள் அதைக் கண்டு மனம் வெதும்பி, வீட்டைத் திருத்தியமைக்க முயன்று கொண்டிருக்கிறான் வீட்டுக்காரன். அவனைக் கண்டு சந்துமுனைச் சிந்து பாடுவோன் ஒருவன் ஏசிய கதைதான் நினைவிற்கு வருகிறது, அமைச்சரின் பேச்சை நினைக்கும்போது!

நாலாம்வகுப்புக்குப் பாடப்புத்தகங்கள் கிடைக்கவில்லை; ஆகவே நாடாளத் தகுதியற்றவர்கள்—என்ற அநியாய அவசர முடிவுக்கு மக்களை இழுத்துக் கொண்டு ஓடுகிறார்கள், அமைச்சர் உள்ளிட்ட போச்சரிட்புக்காரர்கள்! நாலாம்வகுப்புப் பாடப்புத்தகம் மாணவர்களுக்குக் கிடைக்கவில்லைதான்; ஆனால் அந்தப் பள்ளிப் பிள்ளைகளின் இந்த 'அல்ல'லுக்கு யார் காரணம்?

அறிவாலயத்தை நோக்கி ஓடும் அந்த இளம் பிள்ளைகளின் கால்களைத் தடுக்கி விட்டவர்கள் யார்?

ஆறு வார காலம் அறியாமைக் குளத்திலே—குழப்பக் குட்டையிலே அந்த மாணவர்களைத் தூக்கி எறிந்த கொலை பாதகர்கள் யார்?

அவர்கள்தான்! இந்த நாட்டில் நிகழும் ஒவ்வொரு மாபாதகத்திற்கும் கதாநாயக வேடம் தாங்கும் காங்கிரசார்தான்! குற்றப் பரம்பரையாய்-கோணல்மதி கொண்டவர்களாய்—குல்லாயும் கதர்ச் சட்டையும் பூண்டவர்களாய் விளங்கும் காங்கிரசார்தான்!

ஆம்; நாம் சென்னை நகராட்சியில் பெரும்பான்மையினராய் வருவதற்கு முன்பு பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் கல்விக் குழுவில் இருந்த காங்கிரசார், 'அடுத்து யார் ஆட்சி வரப்போகிறதோ? என்னென்ன நடக்குமோ?—அதற்குள் 'நம்மாலானதை'ச் செய்து விடுவோம்'—என்ற பச்சைச் சுயநல எண்ணத்தில் இரவோடு இரவாக தன் கூட்டத்தைக் கூட்டிற்று! முக்காடிட்ட கள்ளர்கள் உலவுகின்ற நள்ளிரவில் இந்த மூவண்ணக் கொடிக்காரர்கள்கூடி, அடுத்த ஆண்டுக்குத் தேவையான நாலாம்வகுப்புப் பாடப்புத்தகத்தை மட்டும் தேர்ந்தெடுத்தனர்.

கூட்டம் கூடிய காலம் சூன் மாதம் நள்ளிரவு! அவர்கள் பதவி விடிந்தால் கருகிவிடும் காலம்! பதவி பறிபோகும் அத்தகைய கடைசி நேரத்தில் — பிரிவுபச்சார விழாக்கள் நடந்தேறி முடிந்த 'வயோதிக காலத்தில்'—தேர்ந்தெடுத்தனர், நாலாம்வகுப்புப் பாடப் புத்தகங்களை மட்டும்!

ஏன் அதை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டும்? அடுத்து வரும் கல்விக் குழுவுக்கு சிரமம் குறைக்கும் பெருந்தன்மையான பணி அது என்றால், ஏன் எல்லா பாடப் புத்தகங்களையும் தேர்ந்தெடுக்காது, நாலாம் வகுப்பு மாணவர்கள்மீது மாத்திரம் கருணை மழை பெய்ய வேண்டும்?

புரையோடிப் போன இக் 'குற்றப் புண்'ணினுள்ளே எவ்வளவு சீழோ?—எத்தனை நாற்றமோ?

நடுநிசியில் கூடி நாலாம்வகுப்புக்குப் பாடப்புத்தகம் தேர்ந்தெடுத்த அந்தத் துன்மார்க்கச் செயலுக்குள்ளே எத்தனை ஊழலோ எத்தனை ஒப்பந்தமோ?

இத்தனைக்கும் இந்தப் புத்தகங்கள் அப்பழுக்கற்றனவா; அரசினரால் அங்கீகரிக்கப்பட்டனவா—என்றால், இல்லை; இல்லை!

அரசினரால் அங்கீகரிக்கப்படாத புத்தகத்தைத்தான் தம் அஸ்தமன காலத்தில் அவசர அவசரமாக அர்த்தராத்திரியிலே கூடித் தேர்ந்தெடுத்திருக்கின்றனர், (காங்கிரஸ்) கல்விக் குழுவினர்.

அந்த 'அங்கீகாரம் பெறாத புத்தகத்தை' அந்தக் குழுவினர் தங்கள் கண்ணாலாவது பார்த்திருக்கிறார்களாயென்றால்—அதுவுமில்லை!

தம் கண்ணால் கண்டிராத புத்தகத்தை—அங்கீகாரம் பெறாத புத்தகத்தை—பள்ளி மாணவர்களுக்கு சிபார்சு செய்திருக்கிறார்கள், அடுத்த நாள் சாவை அணைக்கப் போகும் (காங்கிரஸ்) கல்விக்குழு.

மரணத்தின் கோரப் பசிக்கு அணு அணுவாகத் தன்னைத் தந்து கொண்டிருக்கும் ஒரு கிழவன், ஒட்டும் உறவுமில்லாத அடுத்த வீட்டு வாலிபனுக்கு தனக்குத் தெரியாத—தன் கண்ணால் பாராத மங்கை ஒருத்தியை மணம் முடிக்க நிச்சயிக்கும் கேலிக் கதையின் மறுபதிப்புத்தான் நம் (காங்கிரஸ்) கல்விக் குழுவினர் நாலாம்வகுப்புப் பாடப்புத்தகத்தைத் தேர்ந்தெடுத்த நிகழ்ச்சி!

வரையறை மீறி, எல்லை தாண்டி, காங்கிரசார் சுயநல அடிச்சுவடுகளை விட்டுச் சென்றனர், சென்னை நகராட்சியிலே!

நம் கழகம் பெரும்பான்மை பெற்று, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் இந்தக் 'கல்விக் கறை'யைச் சுட்டிக் காட்டி, தம் கடமைப் பணியாம் பாடப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தனர்!

பள்ளி திறக்க ஆறு நாட்கள் இருக்கும் போதே — மிகக் குறைந்த கால அளவிலேயே எல்லா வகுப்புகளுக்குரிய புத்தகங்களைப் பார்த்துப் பரிசிலித்து—அரசினர் அங்கீகாரம் பெற்றுள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து, சென்னை நகராட்சி ஆணையாளருக்கு அனுப்பினர்!

முன்பிருந்த கல்விக் குழுவால் தேர்ந்தெடுத்த புத்தகத்தை வைப்பதா — இல்லை—இப்போதைய குழுவினர் தேர்ந்தெடுத்ததை வைப்பதா என்ற சந்தேகம் ஏனோ ஆணையாளரை ஆட்கொள்ள அவர் சட்ட ஆலோசகரை அணுகினார்!

ஆனால் சட்ட ஆலோசகர், கட்சி வேறுபாடற்ற நடுநிலையுள்ளவராயிருந்து கல்விச் சிக்கல் பற்றி முடிவு கூறியதாக யாரும் கருதவில்லை. காரணம், அந்த சட்ட ஆலோசகர் சென்னை மாவட்ட காங்கிரசின் தலைவர் டி. செங்கல்வராயனாய் இருந்தார்.

ஆம்; காங்கிரஸ் தலைவர்தான் (காங்கிரஸ்) கல்விக் குழு செய்தது சரியா?—என்று தீர்ப்புக் கூறும் நிலையிலிருந்தார்! அவரிடமிருந்து எதிர்பார்க்காதது போல நீதி வழிப்பட்ட ஆலோசனை கிடைக்கவில்லை! 'முன்பிருந்த (காங்கிரஸ்) கல்விக்குழு செய்தது சரியே' —என்ற அழகு மிகு ஆலோசனையைத் தந்தார்; கட்சிப்பற்று தம் இதய அறைகளிலே நிரம்பி வழிவதை வெளிக்காட்டிக்கொண்டார்.

இதற்குள் நகராட்சி ஆணையாளர், நாலாம்வகுப்புப் பாடப் புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பதில் நகராட்சி சரிவர கவனம் செலுத்தாததால், சென்னை மாநில அரசின் கல்வி இலாகா இந்தப் பிரச்னையில் தலையிடமுடியுமா என்று ஆராய்ந்து வருவதாக அறிக்கைவிட்டார்!

இவ்வாய்ப்பு நோக்கி வாய்நீர் ஒழுகக் காத்திருந்த சிலர் பிரச்சார பீரங்கியை முடுக்கிவிட்டனர். 'நகராட்சியில் குழப்பம்'—என்ற வாய் விட்டலறிக் கூவி, வயிற்றுக்கு உணவு தேடினர். இந்தப் பொய்ப் பிரச்சார நோயின் உச்ச கட்ட உளறல்தான் அமைச்சரின் பேச்சு!

திட்டமிட்டுச் செய்த சதியைப் போன்று காணப்படும் இப் புத்தகச் சிக்கல், நம் கழகத்தின்மீது மாசு கற்பிக்கவே—திறமையில்லையென்று தூற்றவே பின்னப்பட்டதாகும்!

வரம்பு மீறிய (காங்கிரஸ்) கல்விக்குழுவின் செயலும், ஆணையாளரை சட்ட ஆலோசகரிடம் சரணடையும்படியான சூழ்நிலையை உண்டாக்கிய சூழ்ச்சியும், சட்ட ஆலோசகர் கூறும் ஒரு சார்பான முடிவும், நகராட்சியில் காங்கிரசார் போக்கும், அவரது பிரச்சாரமும் திட்டமிடப்பட்ட சதி யென்றால் —

— மெய் எனும் வைர வாள் பொய்த் திரையைக் கிழிப்பதோடு மட்டுமல்ல; பொய்யுரைத்தேபொழுதுபோக்கும் பொல்லாங்குப் பட்டாளத்தை பிளந்தெறிந்து தோல்விப் பிணக்குழியில் தள்ளுவது உறுதி. முட்டித் தட்டும் காங்கிரஸ் செல்வாக்கு மடிகட்டி, துடைதட்டி வரும் உண்மைப் படையின் முன்னே தூள் தூள் ஆவதும் உறுதி! ஃ

வருந்துகிறோம்

கல்லூரி மாணவர் மனதில் மட்டுமல்லாது, நாட்டு மக்கள் மனதிலும் நல்லதோர் இடத்தைப் பெற்ற, சென்னை தியாகராயர் கல்லூரி முதல்வர் திரு. மா. கி. சண்முகம் அவர்கள், 26—7—59-ம் நாள் காலை 5-30 மணிக்கு இயற்கையெய்தினர் என்ற துயரச் செய்தி கேட்டு மீளா வருத்தத்துள் ஆழ்ந்தோம். அன்பும், பண்பும் கொண்ட உள்ளத்தினர்—ஆர்வம் குறையாத பொதுப்பணியாளராம் அந்த நல்லறிவாளரை இழந்து தவிக்கும் மாணவர் சமுதாயத்திற்கும், ஆசிரியர்களுக்கும், அவருடைய உற்றார் உறவினருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

46. அறிவியல் மேதை கலீலியோ

அன்புள்ள மாதவி,

இலக்கிய மறுமலர்ச்சியின் இணையற்ற மேதையாய் ஷேக்ஸ்பியர் விளங்கியதைப் போலவே, அறிவியல் துறையிலும் தன்னிகரற்று விளங்கிய மேதை ஒருவர் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தார். அந்த மேதை உண்மைகளை நிலைநிறுத்தப்பட்ட கஷ்டங்களை நீ உணர வேண்டுமானால், பதினாறாம் நூற்றாண்டுக்கு சற்று என்னோடு பின்னால் வா.

1633—ம் ஆண்டு, ஜூன் மாதம் 22—ம் தேதி, காலை! ரோம் நகரின் கான்வென்ட் ஒன்றில் முகத்திலே ஏளனமும் கேலியும் எக்காளமிட கார்டினல்கள் சிலர் வரிசையாக வீற்றிருக்கிறார்கள். சற்று தூரத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறான் 'குடு குடு' கிழவன் ஒருவன். அவன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளோ விசித்திரமானவை. வேத நூலான பைபிலில் சொல்லப்பட்ட உண்மைகளை மறுத்து, வேறு சிலவற்றை உண்மைகளென மக்களிடத்திலே பிரச்சாரம் செய்கிறான் என்பது அவன் மீதுள்ள குற்றச்சாட்டு. அப்படி அவன் என்ன குற்றங்கள் செய்தான் தெரியுமா? உலகம் தட்டையல்ல; உருண்டை — என்றான். சூரியன் நிலையாகவே நிற்கிறது; பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது — என்றான். இப்படி அவன் கூறிய சில உண்மைகள் பைபிலில் காணப்பட்ட கூற்றுக்களுக்கு மாறுபட்டதால, சினங்கொண்ட பாதிரிகள் அவனை எச்சரித்தனர். எதிர்ப்புக்களை லட்சியம் செய்தால் உண்மையை எப்படி நிலைநிறுத்த முடியும்? கிழவன் தன் தூய பணியைத் தொடர்ந்தான். விளைவு? பாதிரிகள் 'மத விசாரணை சபை'யின் முன் அக்கிழவனை விசாரணைக்குக் கொண்டு வந்தனர்.

விசாரணைக்குக் கொண்டு வரப்பட்ட கிழவன் கலீலியோ என்பதை நான் உனக்குச் சொல்ல வேண்டியதில்லை!

பைபிலில் சொல்லப்பட்டவைகளை உண்மையென அப்படியே ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுக் கொடுக்காவிட்டால் மரண தண்டனைதான் கிடைக்குமென தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. உலகில் வாழ்ந்து இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிய வேண்டுமென்ற பேராவல் ஒருபுறம்; நம்பாதவைகளை உண்மையென ஒப்புக்கொண்டு உண்மைக்கும் மனச்சான்றுக்கும் துரோகமிழைப்பதா என்ற கவலை மற்றொரு புறம்! முட்டாள்களை எதிர்த்துச் சாவதைக் காட்டிலும், உண்மையைக் காண வாழ்வது மேலென கலீலியோ முடிவு செய்தார். பாதிரிகள் விரும்பியபடியே, பைபிலின் வாசகங்கள் உண்மையெனக் கையெழுத்திட்டுக் கொடுத்தார். விசாரணையில் விடுதலை பெற்று வெளியே வந்தவுடன், அங்கு குழுமியிருந்த நண்பர்களிடமும் மாணாக்கர்களிடமும் சொன்னாராம், "நான் எதில் கையெழுத்திட்டாலென்ன; உலகம்தான் சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மை மாறவா போகிறது?"

ஆம், மாதவி! கலீலியோ வாழ வேண்டுமென்று செய்த முடிவே புத்திசாலித்தனமானது; அவர் மட்டும் மரண தண்டனையை ஏற்றுக் கொண்டிருந்தால், உலகம் எவ்வளவு சாதனைகளை இழந்திருக்கும் தெரியுமா? அகன்ற வானம்போல், மனித அறிவை விசாலப் படுத்திய மேதையல்லவா கலீலியோ?

இத்தாலியிலுள்ள பைசா நகரத்தில் 1564-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் கலீலியோ பிறந்தார். சிறு வயதிலேயே துடுக்கும், கூர்மையான அறிவும் தன் மைந்தன் நிரம்பப் பெற்றிருப்பதைக் கண்ட கலீலியோவின் தந்தை, வாட்டிடும் வறுமையிலும், அவனுக்கு உயர் கல்வி அளிக்க எண்ணி கல்லூரியில் சேர்த்தார். பைசா பல்கலைக் கழகம் கலீலியோவை மாணாக்கனாகப் பெறும் பேறு பெற்றது. ஆரம்பத்தில் மருத்துவம் பயின்ற கலீலியோ மெள்ள மெள்ளத் தன் கவனத்தை கணிதம் வானாராய்ச்சி ஆகியவற்றில் செலுத்தலானார். அதுவரையில் ஆராய்ச்சித் துறையில் மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டு, தனியரசோச்சிய மேதை அரிஸ்டாடலின் தத்துவங்கள், கலீலியோவால் குற்றம் கண்டு பிடிக்கப்பட்டன. மேலிருந்து கீழே விழும் வேறுபட்ட நிறையுடைய இரண்டு பொருள்களின் வேகம், அதன் எடையின் விகிதத்தில் இருக்கும் என்பது அரிஸ்டாட்டலின் சித்தாந்தம். அதாவது, கனமான ஒரு பொருளும் லேசான ஒரு பொருளும் ஒரு உயரத்திலிருந்து ஒரே சமயத்தில் விடப்பட்டால், கனமான பொருள் முன்னேயும் லேசான பொருள் பின்னேயும் பூமியை வந்து அடையும் என்பது அதன் பொருள். ஆனால் கலீலியோ இதற்கு மாறுபட்டு, வாயு மண்டலத்தில் சக்தி பாதிக்காமல் இருக்குமானால் இரண்டு பொருள்களும் ஒரே சமயத்தில் தான் பூமியை வந்து அடையும் என்று கூறியதோடு, பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்திலேறி தன் தத்துவத்தை நிரூபித்துக் காட்டினார். அரிஸ்டாட்டலின் கொள்கையுடையார் கண்ணால் கண்டதையும் நம்ப மறுத்தனர். கலீலியோ, அவர்களுடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டார்.

1583—ம் ஆண்டு. ஆண்டவனைத் தொழ ஆலயத்துக்குச் சென்ற கலீலியோ ஆடிக்கொண்டிருக்கும் விளக்கைப் பார்த்தார். வேகமாக ஆடினாலும், மெதுவாக ஆடினாலும், ஒரு திசையிலிருந்து மறுதிசை செல்ல அது எடுத்துக் கொள்ளும் நேரம் ஒன்றாகவே இருப்பதைக் கண்டார். இதன் அடிப்படையில் மீண்டும் அவர் தொடர்ந்து நடத்திய ஆராய்ச்சிகள் 'பெண்டுலத்தின் விதிகள்' என்ற சில உண்மைகளை விஞ்ஞான உலகுக்கு அளித்தன. இந்த விதிகளாலேயே பிற்காலத்தில் கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சிறிது காலத்தில் வானாராய்ச்சியில் கலீலியோ முழுமூச்சோடு ஈடுபட்டார். தூரத்திலுள்ள பொருட்களை அருகில் பார்க்கும் கருவியான 'டெலிஸ்கோப்'பை செம்மைப்படுத்தி சிறந்த ஒரு கருவியாக அமைத்த பெருமை கலீலியோவையே சாரும்.

பாடுவா பல்கலைக் கழகம் அவரைப் பேராசிரியராக ஏற்றுத் தன்னைக் கௌரவித்துக் கொண்டது. கலீலியோவின் புதிய கருவியான 'டெலிஸ்கோப்'பைக் காண பல்லாயிரக் கணக்கில் மக்கள் கூடினர். சுமார் ஆறு மணி நேரம் ஆயிற்றும், அக்கூட்டமனைத்தும் அதைக் கண்டு மகிழ. 'டெலிஸ்கோப்'பின் உதவியால், வானாராய்ச்சியில் பல புதிய உண்மைகள் துவக்கம் பெற்றன. இந்த உண்மைகள் கண்டு பிடிக்கப்பட்டதால்தான் கடிதத்தின் ஆரம்பத்தில் நான் சொல்லியபடி கலீலியோ பல தொல்லைகளுக்கு ஆளானார். காக்கினிஎன்ற பாதிரி கலீலியோவை பகிரங்கமாக எள்ளி நகையாடினார். அப்பொழுது போப்பாண்டவராக இருந்த ஐந்தாம் பால் கலீலியோவுக்கு எச்சரிக்கை விடுத்தார். ஆனால், கலீலியோவின் மீதிருந்த வழக்கு முடிந்தவுடன் அவரை விசாரணை செய்த பாதிரிகளில் முக்கியமானவர்களில் ஒருவரான பெல்லார்மைன் சொன்னார்; "கலீலியோ கூறுவதில் கூட உண்மை யிருக்குமானால், பைபிலின் வாசகத்துக்கு நாம் புதிய விளக்கம் தரவேண்டுமேயல்லாது, நிரூபிக்கப்பட்ட உண்மைகளை எதிர்த்துப் போராடுவதில் அர்த்தமில்லை."

ஆம்; மாதவி! பாதிரிகளிலும் மனிதாபிமானத்தோடும் உண்மையைக் காணும் ஆவலோடும் அந்தக் காலத்திலும் சிலர் இருந்திருக்கிறார்கள்.

1637—ம் ஆண்டு; ஒளிமயமான வான வீதியின் உண்மைகளைக்கண்டு சொன்ன கலீலியோவின் வாழ்வில் இருள் கவிழ்ந்த ஆண்டு. மனித இனத்தின் மிகக் கூர்மையான இருவிழிகள் ஒளியிழந்தன. ஆம்; பேரறிஞர் கலீலியோ குருடரானார். அந்தப் பேரறிவாளனின் கூரிய விழிகள் எங்கே தன் ரகசிய மனைத்தையும் அம்பலப் படுத்தி விடுமோ என அஞ்சித்தான் இயற்கை அன்னை அப்பெருங் கேட்டினைச் செய்தாள் போலும்!

கண்ணிருந்த பொழுது அவர் எழுதிய நூல்கள் பல; கண்ணிழந்த பொழுது, அவர் வாயால் சொல்ல விவியானி, டாரி செல்லி போன்ற அவருடைய மாணாக்கர்கள் எழுதிய நூல்கள் சில! 1642—ம் ஆண்டு, ஜனவரி மாதம், 8-ம் நாள் கலீலியோ இயற்கை எய்தினர்.

வானுலகின் புதுமைகளைக் கண்ட விஞ்ஞான வித்தகன் கலீலியோ! கோபர்னிகஸ் என்ற வானாராய்ச்சி மேதையின் தத்துவங்களை ஆதாரபூர்வமாக நிரூபித்தவர் கலீலியோ! நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் பீடு நடைபோடப் பாதையமைத்தவர் கலீலியோ! உண்மைக்காக இறந்து தியாகியாகாமல், வாழ்ந்து அதை வளப்படுத்தியவர் கலீலியோ! அறிவியல் உலகில் விரல் விட்டு எண்ணத்தக்க பத்து பேர்களில் அவரும் ஒருவர். மனிதனின் கதையில் அவருடைய பங்கை மறைப்பது வரலாற்றுக்குச் செய்யும் மகத்தான துரோகமல்லவா? அதிலும் என்போன்ற விஞ்ஞான மாணவன் அதைச் செய்யலாமா? செய்யத்தான் நீ விடுவாயா?

அன்புள்ள,

அகத்தியன்.

வெளியேறினர்; வெறியர்!

★

"நான் இந்தி மொழியில் உங்களிடையே பேச இயலாமைக்கு வருந்துகிறேன்.

"எனக்குத் தெரிந்த தமிழிலோ, தெலுங்கிலோ பேசினால் உங்களுக்குப் புரியவே புரியாது.

"ஆங்கிலத்தில் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே ஆங்கிலத்தில் பேசுகிறேன்."

—இப்படித் தென்டனிட்டு வேண்டிக்கொண்ட பிறகுதான் பேசினார், உத்திரப்பிரதேச மாநில கவர்னர் வி. வி. கிரி, அந்த மாநில சட்டமன்றத்தில்!

என்றாலும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் அச்சடிக்கப்பட்ட அவரது சொற்பொழிவை வாங்கிக்கொண்டே, சோஷலிஸ்ட் கட்சியைச் சார்ந்த சில இந்தி வெறியர்கள்,

'நீங்கள் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தப் போகிறீர்களா?— இல்லை, இந்தியில் பேசப் போகிறீர்களா?'

—என்று துடுக்குத்தனமாகக் கேட்டனர். கவர்னர் ஆங்கிலத்தில பேசவே அந்த வெறியர்கள் வெளியேறினர். இத்தனைக்கும் கவர்னர் அந்த உரையில் இந்தி ஆட்சி மொழியாகவேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார். இருந்தும் வெளியேறுகிறார்கள், இந்தி மொழி ஆட்சிமொழியாக்கிட கச்சைகட்டி நிற்போர்!

என்னே அவர்களின் மொழிவெறி!

ஒரு பக்கக் கதை

"ஆயிரம் முறை அடித்துச் சொல்கிறேன் அண்ணா! நீ கோழைதான்! கோழைதான்!"

—கோமதியின் கணீரென்ற வெண்கலக் குரல் இடியோசையைப்போல் அவன் காதுகளில் தாக்கியது.

ஆழமான பெருமூச்சு ஒன்றை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு, அவன் மௌனமாக வீற்றிருந்தான். அவனது பெருமூச்சுக்குப் பொருள்தேடும் சக்தியற்றிருந்தாள், கோமதி.

"நீ பயந்துபோய் விட்டாய், அண்ணா! சமுதாயத்தின் நொண்டிக் கைகள் இன்னமும் பிடித்திருக்கும் துருப்பிடித்துப்போன கொலைக் கருவியைக் கண்டு நீ நடுநடுங்கிவிட்டாய்! அண்ணா... உன் நெஞ்சைக் கிழித்துப் பார்க்க என் கரங்கள் துடிக்கின்றன! அங்கே இரும்பு இருக்கிறதா; இருதயம் இருக்கிறதா; அல்லது எதுவுமே இல்லாத எலும்புக்கூடாக உலவிக்கொண்டிருக்கிறாயா?...."

—உயிருக்கு விலைவைக்கும் நீதிமன்றத்திலேயிருந்து 'நீ ஒரு கொலைகாரன்! தூக்குமேடைக்குத் துரத்தப்படவேண்டிய துர்த்தன்' என்ற குற்றச்சாட்டு எழும்பியிருந்தால்கூட அவன் பொறுத்திருப்பான்; ஆனால் 'சமுதாயத்திற்குப் பயந்தவன்' என்ற பட்டத்தை மட்டும் அவன் பிணம்கூட சகித்துக்கொள்ள முடியாதே!

"கோமதீ!......என்ன பேசுகிறாய்? ஏற்கனவே கொதிக்கும் உலைபோல் தவிக்கிறதம்மா என் நெஞ்சு! இன்னும் நெருப்பை அள்ளிக் கொட்டத்தான் என்னைத் தேடிப் பிடித்தாயா, இத்தனை நாட்களுக்குப் பிறகு?"

—ஆணையிடத் தேவையான அண்ணனின் கம்பீரக் குரல், ஓட்டை விழுந்த இசைத் தட்டைப்போல் கரகரப்பதைக் கேட்டு அவள் திடுக்கிட்டாள். ஆனாலும் பீறிட்டுக் கிளம்பிய பாசத்திற்கு அணையிடத்தானே வேண்டும்? அவன் செய்தகுற்றம் என்ன சாதாரணமானதா? கோமதியால் அவனை மன்னிக்கவே முடியாதே! அவள் பிறந்த பெண் குலத்திற்கே அல்லவா அவன் மாபெரும் துரோகத்தைச் செய்துவிட்டான்!

●

தன் உடன்படித்த தோழியை தன் உடன்பிறந்தானுக்கு அவள் ஏன் அறிமுகம்செய்து வைத்தாள்? சாந்தா—இத்தனைக்கும் அவளைப் பேரழகி என்று சொல்லிவிட முடியாது! பார்ப்பவர் கண்களை ஈர்த்திழுக்கும் காந்தச் சக்தி அவளுக்கிருந்தது என்றால், அது நிச்சயம் உண்மையல்ல! ஏன்; அவன்கூட அவளை நோக்கி 'பார்வையில் தேன் சிந்திப் போகுதடி' என்று பண் பாடியதில்லையே; குளிர் நிலவுக்கும் அவளது கோமள முகத்துக்கும் இடையே ஒற்றுமையைத் தேடிக் காவியப் பூங்காவிலே திரிந்ததும் கிடையாது!

ஆனாலும், இருவரும் ஒன்று கலந்தார்கள்! அந்த உறவை வெட்டிப் பிரிக்க இந்த உலகத்தில் எந்த சக்தியுமே கிடையாது என்று இறுமாந்து கிடந்தார்கள்.

"இப்படியே நாம் செத்துவிட்டால் என்ன அத்தான்? எதிர்காலம் என்ற கொடியவன் நம் பிணங்களை வேண்டுமானால் குலைத்துவிட்டுப் போகட்டுமே" என்பாள் அவள்!

"பைத்தியமே! நான் கோழையல்ல! இந்த அகிலமே எதிர்த்து நின்றாலும், 'நீ எனக்கு, நான் உனக்கு' என்ற உறுதி உடைபட்டுப் போகவிட மாட்டேன்!"

—இந்த உறுதிகள் அனைத்தும் காதல் உலகம் கட்டிவைத்திருக்கும் கற்பனை மண்டபத்தின் அலங்காரச் சின்னங்கள் என்று அவனுக்கு அப்போது தெரியாது. சந்தர்ப்பச் சூறாவளியின் வேகப் பாய்ச்சலிலே அவை பொலபொலவென உதிர்ந்துவிடும் என்று சிந்திக்கும் அளவுக்குக்கூட அவன் இருதயத்தில் கடின நினைவுகள் அண்டியதில்லையே; அதுவரையில்!

அவனோ ஊர் சுற்றி! பகுத்தறிவுப் பசி எடுத்த நாட்டிற்குச் சொல்லுணவை வாரி வழங்கும் 'பாரி'! பட்டி தொட்டிகளில்; சாக்கடையோரத்தில்; சேரிக்கு மத்தியில்—தொண்டைக் குழியில் ஈரம் வற்றும் அளவுக்கு சமுதாயக் கருத்துக்கள் வழங்கும் சொற்பொழிவாளன். தூற்றித் திரிகின்ற இருதயத்திற்குள்ளும் துளி இடம் கிடைக்காதா தன் கொள்கையைத் திணிக்க எனத் தேடி ஓடுபவன்!

அப்படித்தான் ஒரு முறை ஓட நேர்ந்துவிட்டது ஊரைவிட்டு! கொள்கை விளக்கம் தர அவன் சென்ற நேரத்தில், அவன் வாழ்வில் கொள்ளிக்கட்டை திணிக்கப்பட்டுவிட்டது! சாந்தாவைப் பெற்றவர்கள், அந்தச் சமுதாயச் சிற்பியின் பந்தத்திலிருந்து அவளைப் பறித்திழுத்துவிட்டார்கள்; குலப்பெருமையைக் காக்கும் அவர்களது வெறிக் கூச்சலிலே, சாந்தாவின் உரிமை முழக்கம் அமுந்தி மறைந்துவிட்டது; அந்த இலட்சிய விளக்கை ஊதியணைத்து காத்திருந்த ஒருவனின் மடியிலே வீசி எறிந்துவிட்டார்கள்!

கலங்கரை விளக்கை நாடியலையும் மாலுமியைப்போல் ஓடிவந்த அவன், தேடினான் அவளை. விம்மி அழுது எதிர் வந்த கோமதி "விபரீதம் நேர்ந்துவிட்டது அண்ணா" என்று கதறினாள்!

●

உள்ளே அடிக்கும் புயலை வெளிப்படுத்தும் சக்தியைக்கூட அவன் இழந்துவிட்டான், அதற்குப்பிறகு! இல்லாவிடில் ஆற்றங்கரை மணல்மேட்டில், சலனமற்ற மலைச்சிகரம்போல் உட்கார்ந்திருப்பானேன்?

ஆற்று நீரின் சலசலப்புபோல்—காய்ந்த சருகுகள் காற்றோடு பேசுகின்ற இரகசியம்போல்—ஏதோ ஒரு ஓசை—அது அவனை எப்படித்தான் ஈர்த்ததோ தெரியவில்லை; திரும்பினான். மறுகணம், படி என்று அடிவைக்க அது பாதாளத்தின் விளிம்பானால் என்ன நேருமோ—அந்த நிலையை அடைந்தான்! ஆமாம்; சாந்தாதான் நின்றுகொண்டிருந்தாள் அங்கே! பார்வை படம் பிடித்த தூரத்திற்கு வேறு உயிருள்ள ஜீவன்களின் சாயலே தெரியவில்லை, அவ்விடத்தில்!

"நீ...?"

"உங்களுக்காக வந்திருக்கிறேன்; உங்களுடன் வந்துவிடுகிறேன்!"—அவளது தேமதுரக் குரலில் என்றைக்கும் அவன் கேட்டிராத உறுதி தெரிந்தது!

அவன் ஆலையிலகப்பட்ட கரும்பானான்!

"என்ன சொல்கிறீர்கள்....?"

எதையும் சொல்லமுடியாதபடி இருதயம் நின்றுவிடக்கூடாதா என்று தவித்தான்! அவள் கண்கள் அவனை அதட்டின! 'நான் உனக்கு; நீ எனக்கு' — கடந்த காலத்தின் கணக்கேட்டிலிருந்து அந்தப்பக்கத்தைப் புரட்டிக்காட்டின!

"ஐயோ!.... இது என்ன கொடுமை! சாந்தா, நீ மணமானவள்; மணமானவள்!"

"இல்லை; சூழ்ச்சிக் கயிற்றால் சுழன்றோடும் பம்பரம் நான்! இந்த பம்பரம் மீளமுடியாத பள்ளத்திலே விழுந்துவிடத்தான் வேண்டுமா, அத்தான்?"

"முடியாது! முடியாது! நான் இனி உன் வாழ்வோடு விளையாடமாட்டேன்; போய்விடு! என்னைத் துரோகியாக்கிவிடாதே!"

"கணவன் என்ற பந்தம் எனக்கொன்று இருக்கிறது — அது தானே உங்கள் வெறுப்பின் காரணம்?"

"ஆமாம்! நீதியுடன் எனக்கும் கொஞ்சம் பந்தம் இருக்கிறது—அதுதான் என் மறுப்பின் காரணம்! போ; போய்விடு!"

புயலைச் சூறாவளியாக்கியவள் அப்போது போய்விட்டாள். அவள் நடையில் பழைய நளினம் காணப்படவில்லை; போர்க்கள வீரனின் மிடுக்குத்தான் தெரிந்தது!

●

அதோடு முடிந்திருந்தால் அவனும் ஒரு 'காதல் தியாகி'யாகிவிட்டிருப்பான்; ஆனால் அவன் ஏன் 'கோழை' என்ற குற்றச்சாட்டுக்கு இலக்கானான்? அதற்கான நிகழ்ச்சியும் உடனடியாக நிகழ்ந்துவிட்டது!

சாந்தா — விரைவிலேயே பொட்டிழந்து விட்டாள்; பூ விழந்துவிட்டாள்; தனிக்காட்டு நெடுமரம்போல் கணவனை இழந்த கைம்பெண்ணாய் நின்றாள்! காலம் வெகு வேகமாகத் தன் 'திருவிளையாடலை'ச் செய்துவிட்டது!

ஆனால், அவனோ ஓடிவிட்டான் ஊரைவிட்டு, மறுநாளே!

"சீர்திருத்தச்செம்மலே! செவிப்பறைகிழியுமட்டும்சமுதாயத்தைச் சாடிய தோழனே! ஊருக்குத்தான் உபதேசித்தாயா? உனக்கில்லையா இருதயம்? அந்த மாற்றுக்குறையாத் தங்கத்தை — கணவனை இழந்த காரிகையை பால்ய விதவையை வாழவைக்க மாட்டாயா?...." — என்ற ஊர் ஓங்காரக்கூச்சல் எழுப்புமுன்னே ஓடியேபோய்விட்டான்!

●

ஆனால், திசைதப்பிய மரக்கலம்போல் எங்கேயோ அலைந்துகொண்டிருந்த அவனைத்தான் கண்டுபிடித்துவிட்டாள், தேடியலைந்த தங்கை! இதோ, 'சாந்தாவின் வாழ்வுக்கு வழிசொல்; அல்லது சாவுக்குத் திசைகாட்டு' என்று கண்ணகியாய் மாறி நிற்கிறாள். அவனோ உள்ளத்தை இறுக்கிப் பிடித்துக்கொண்டு உறுமுகின்ற கூண்டுப்புலிபோல் நடைபோடுகிறான்.

"உன்னோடுதான் வாழத்துடித்தாள்; இடையிலே நதி ஒன்று குறுக்கிட்டது; இன்று வற்றிவிட்டது! மீண்டும் நடைபோட ஏன் அண்ணா தயக்கம்?"

— அவன் வாய் திறக்கவில்லை!

"உன்னை நினைத்து உருகும் அந்த உத்தமியை ஏன் உதறிவிட்டு ஓடிவந்தாய்?"

—அதற்கும் மௌனம்தான்!

"அவள் விதவை என்பதால்தான் — இல்லையா?"

— பதில் இல்லை!

"நாட்டுக்கும் வீட்டுக்கும் தனித்தனி அகராதி தயாரிக்கும் என் உடன் பிறந்தவனே! உன்னுடைய சீர்திருத்தம் இப்படிச் செல்லாக்காசாகத்தான் வேண்டுமா?"

— கோமதி கோபத்தின் உச்சிக்கே போய்விட்டாள்!

"கோமு...!" — அவன்தான் அலறினான்! "அவளது விதவைக் கோலம் இல்லை தங்கையே; என்னை விரட்டியது! வாழ்விழந்த அவளை வாட்டி வதைக்கவேண்டும் என்பதல்ல அம்மா என் ஆசை!"

"பிறகு?...."

"அதை ஏன் கேட்கிறாய்? எப்படிச் சொல்வேன் அதை! நீ ஒரு பெண்; தாங்கிக்கொள்வாயா? தாங்கிக்கொள்வாயா?"

"அண்ணா!"

"ஆமாம்; கோமு! சாந்தாவின் வாழ்விலே படர்ந்த கறையில்லை என்னைக் கோழையாக்கியது! அவள் கையிலே பட்ட கறை தங்கையே; இரத்தக்கறை!"

"என்ன சொல்கிறீர்கள்?"

"அவள் விதவையான கதையைச்சொல்கிறேன்! அவள் கணவனின் சாவிலே பொதிந்துகிடக்கும் ரகசியத்தைச் சொல்கிறேன்! அவள், தான் விதவையாக வேண்டுமே என்பதற்காக, விஷம் கொடுக்கப்பட்டு விட்டான், கணவன்! இதை என்னிடமே சொல்லிவிட்ட உன் தோழியோடு நான் எப்படியம்மா வாழ்வேன்? எப்படியம்மா வாழ்வேன்?"

— குழந்தையைப்போல் அழுத அவன் மீண்டும் மறைந்துவிட்டான்; தன் தங்கையின் பார்வையிலிருந்து எங்கேயோ போய் விட்டான்!

ஆனால், ஊர் இன்னும் அவனை 'கோழை' என்றுதான் தூற்றிக்கொண்டிருக்கிறது!

●

[இப்படியும் நடக்குமா —என்று முகம் சுளிக்காதீர்கள்! நடக்க முடியாத ஒன்றல்ல இது! "சீதாலட்சுமி என்ற பெண், வேறு ஆடவர்மேல் கொண்ட மோகத்தால், தன் கணவனின் கழுத்தை நெறித்துத் தூக்கிட்டுத் தொங்கவிட்டாள்"— என்பது சமீபத்திய திண்டுக்கல் செய்தி.]

- சொர்ணம்

சென்ற இதழில் :

இருங்கோவேளின் மரமாளிகைக்கு எதிரில், தீப்பந்தங்களுக்கிடையே துவண்டு விழாமல் நின்றுகொண்டிருந்த செழியனைக்கண்டு வியப்படைகிருள், இருங்கோவேளின் தங்கை, தாமரை!...

கடைசியில் தனக்கு எதிரில் வருகிற இருங்கோவேளின் கொடுமையான சித்ரவதைகளைக்கண்டிக்கிருன், செழியன். சோழ மன்னன் கரிகாலனையும், பாண்டிய மன்னனையும் இழித்தும் பழித்தும் கூறிய இருங்கோவேள், செழியனின் கன்னத்தில் மாறிமாறி அறைகிருன்....

இந்தக் காட்சியை இமைகொட்டாமல் பார்த்த தாமரை, அண்ணன் சென்றதும் அங்கே வருகிருள். மயக்கமுற்றுக் கிடக்கும் கைதிகளுக்கு மயக்கம் தெளிவித்து உணவளிக்கும்படி உத்திரவிடுகிருள். பிறகு செழியனை நெருங்கி, "தண்ணீர் வேண்டுமா?" என்று கேட்கிருள்...

அவளது அழகிய உருவத்தை முன்பு எங்கேயோ கண்டிருப்பதாகத் தோன்றுகிறது, செழியனுக்கு அவன் நினைவுகள் பின்னேக்கிச் செல்கின்றன.

முன்பொருமுறை பாண்டியன் பெருவழுதி, செழியனை அரண்மனைக்கு அழைத்துவரச் சொல்கிருன். செழியன் வந்தவுடன், அவனுக்கு, தான் மணம் முடிக்கக்கருதியிருப்பதாகத் தெரிவிக்கிருன். அதோடு ஒரு அழகிய பெண்ணின் உருவப் படத்தையும் காட்டுகிருன். முன்பொரு முறை தான் கண்ட அத்தகையபேரெழிலுக்கு உரியவளையே இப்போது காண்பதாகக் கருதுகிருன் செழியன்...

தாமரையிடம் தண்ணீர் பெறுகிருன்....அவளை யார் எனக் கேட்கிருன்....சரியான பதில் சொல்லாது சென்றுவிடுகிருள் அவள்....

இறுதியில் 'சாவூருக்குப் போகும் வழி'யில் அழைத்துச் செல்லப்பட்டு, சிறையில் அடைக்கப்படுகிருன் செழியன்....

அவன் இழுத்துச் செல்லப்படுகின்ற கொடிய காட்சியை தூர நின்று கவலையோடு பார்த்துக் கொண்டிருக்கிருள் தாமரை. பிறகு அருவிக்கரையில்தான் சந்தித்த ஆண் உருவில் இருக்கிற முத்துநகையை வீட்டிற்கு அழைத்து வருவது பற்றி யோசிக்கிருள்....

★ ★ ★

11. கொடியும் - கோடரியும்!

தாமரை வந்து தன்னை அழைத்துப் போகும் வரையில் அருவிக்கரையிலேயே காத்திருப்பது என்று முடிவு செய்துகொண்டு இரவு முழுவதும் அங்கேயே உட்கார்ந்து கிடந்தாள் முத்துநகை. நட்சத்திரங்களைக்கூட வெளியே காட்டாமல் வானம் கருப்புத் திரையிட்டிருந்தது. இடையிடையே ஜலதோஷக்காரன் இருமுவது போல இடியொலி வேறு! உலைக்கூடத்தில் எழுகின்ற நெருப்புக்கீற்றுபோல மின்னல் ஒளியும் அத்துடன் சேர்ந்துகொண்டது. இயற்கை, அவளது உள்ளத்தைப் படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தது.

புலவர் காரிக்கண்ணனர் அவள் எதிரே வந்து நின்று 'உன்னைப் பிரிந்து நான் என்ன பாடுபடுகிறேனம்மா — ஏன் மகளே; இப்படி என்னைச் சித்ரவதை செய்கிருய்?'—என்று கண்ணீர் விடுவதுபோல் தோன்றும்; உடனே அதற்கு பதில் பிறக்கும் அவள் நெஞ்சத்தில்!

"தாய் நாட்டைக் காட்டிக் கொடுப்பது தந்தையாயிருந்தால் என்ன; யாராய் இருந்தால் என்ன? அவர்களை எதிர்த்து நிற்பதே உண்மையான நாட்டுப் பற்றுக் கொண்டவர்களின் கடமை!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

யவனக் கிழவன் வேடத்திலே இருங்கோவேள், தன் தந்தையாருடன் நட்பு வைத்திருப்பதாக முடிவுகட்டி வீட்டைவிட்டு வெளியேறிய அந்தப் பாவை, அதே இருங்கோவேளிடம் தன்னையறியாமல் தன் மனத்தைப் பறிகொடுத்து விட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிருள் என்பது வேடிக்கைதானே!

அவள் செய்து முடிக்க வேண்டிய கடமையுணர்வு வேறு அவளைத் துரத்திக்கொண்டேயிருந்தது. பரிதாபத்துக்குரிய தாமரையோ இவளை ஆண் என்று நம்பி காதல் அடிமையாகிவிட்டேன் என்று காலில் விழுகிருள்—ஒன்றையொன்று முந்திக் கொண்டு சுழன்றடிக்கும் நினைவுச் சூருவளியில் கண்களை மெல்ல மூடிக் கொண்டு மரத்தில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள் அந்தப் பூங்கொடி. பயமுறுத்திக் கொண்டிருந்தும் இடியும் மின்னலும் மரக்கிளையில் அமர்ந்திருந்த ஒரு சில பறவைகளின் அமைதியைக் குலைத்தன. அவைகள் குரலெழுப்பியவாறு கிளைகளில் அங்குமிங்கும் நடைபோட்ட வண்ணமிருந்தன. முத்துநகை, பறவைகளின ஒலியைக் கூர்ந்து கவனித்தாள். அவளும் ஏதாவது வாய் விட்டுப் பேச வேண்டும்போல் தோன்றியது. ஊமைபோல வாய்மூடிக் கிடந்தது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. வீட்டில் இருந்தால் புலவருடன ஏதாவது உரையாடிக் கொண்டிருப்பாள். அவளது கேள்விகளுக்குப் பதில் கூறுவதென்ருல் புலவருக்கும் தனி இன்பம்! அவர் எழுதுகிற பாட்டு ஒவ்வொன்றைப்பற்றியும் அவள் எழுப்புகின்ற ஐய வினக்களும் அதற்கு புலவர் தரும் விளக்கமும் நிறைந்து அந்த வீடே ஒரு தமிழ்ப் பூங்காவாகக் காட்சியளிக்கும். அப்படிப்பட்டவள் வாயை மூடிக்கொண்டு கிடப்ப தென்ருல்?

அவள் ஆவலை அதிகப் படுத்துவதுபோல் அமைந்தது பறவையின் ஒலி. அந்தப் பறவைகளுக்குப் பதில் கூறுவதுபோல் அவைகளைப் போலவே கத்தினுள். பறவைகளைப் போல குரலை மாற்றிப் பேச முடிகிறது என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சி அடைந்தாள். வகை வகையான பறவைகளின் ஒலிகளை நன்கு கவனித்து அவைகளுடன் போட்டி போட்டுக் கத்தினுள். அவள் கத்துவதைக் கேட்டு தூங்கிக் கொண்டிருந்த சில பறவைகளும் விழித்துக்கொண்டு கத்த ஆரம்பித்தன. அவளுக்கு அது ஒரே வேடிக்கையாக இருந்தது. இரவுப் பொழுதை இப்படியே கழிக்கலாம் என்று முடிவு கட்டிக் கொண்டாள்.

இந்த சப்தத்தைக் கேட்டு குதிரை வேறு கனைத்திடத் தொடங்கிற்று. அருகே சென்று அதைத் தட்டிக் கொடுத்துவிட்டு மறுபடியும் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டாள். கொஞ்சும் கிளியின் அச்சக்குரல்! அதே போல் அவளும் ஒலித்தாள். கோட்டானின் வரட்டுக் குரல்! அதிலும் ஜெயித்தாள். வில்லில் இருந்து கிளம்பும் அம்பு எழுப்பும் ஒலிபோல் கருடன எழுப்பும் "ஙொய்" என்ற ஒலி! அந்தப் போட்டியிலும் வெற்றி பெறுள். அவளது சிந்தனை பலமாக வேலை செய்யத் தொடங்கியது. சற்று நேரம் மௌனம். குரலை எப்படியெப்படியோ மாற்றி ஒலித்துப் பார்த்தாள். பறவைகளுடன் நடந்த போட்டி நின்றுவிட்டது இப்போது! மனிதர்களுடன் போட்டிக்கு ஆயத்தமானுள்.

ஆண் குரலில் பேசிப் பழக வேண்டுமென்ற துடிப்பு அதிகமாயிற்று. தாமரையுடன் சென்ருல் அங்கும் எழுதி எழுதிக் காட்டிக் கொண்டிருக்க முடியாது என்ற எண்ணம் மேலோங்கிற்று. பறவைகள்போல் கத்த முடிந்த பிறகு ஆண்களைப் போல பேசப் பழகிக்கொள்ளமுடியாதாஎன்ன? துணிவு பிறந்தது; பேச ஆரம்பித்தாள். எடுத்த எடுப்பில் வெற்றி கிட்டவில்லை. ஆனுலும் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கை உதயமாயிற்று. தன் தந்தையார் எழுதிய கவிதைகள் பலவற்றை மனப்பாடம் செய்து வைத்திருந்தாள். அவைகளையெல்லாம் ஆண் குரலில் முழக்கமிடத் தொடங்கினுள். இறுதியில் அவளுக்கு வெற்றிதாள்!

இப்போது அவளால் ஒரு ஆணைப் போல பேச முடியும். ஆனல்கொஞ்சம் தொண்டையை வலிக்கிறது. அதற்காக என்ன செய்வது? கடமையை நிறைவேற்றும் பொறுப்பைத் தானே அள்ளிப் போட்டுக்கொண்டு கிளம்பியிருக்கிருளே! திடீரென்று முத்துநகைக்கு ஒரு சந்தேகம்; இயற்கையான பெண் குரல் இருக்கிறதா; இல்லையா— என்று! சொந்தக் குரலில் பேசிப் பார்த்தாள். என்ன பேசுவது

'ஓவிய மன்னர்'ருக்குப் பொன்னுடை!

நாடாளும் மன்னரின்—நானாவிதக் கடவுளரின் சல்லாபக்கோயில்களைத்தான் சித்திரக்கூடமாக்கிக் காட்டின, காவியமும் ஓவியமும், இது வரை!

ஆனால், இப்போது அவை மக்களின் கலைகளாகப் புது உருவெடுத்துப் பரவசமூட்டி வருகின்றன! குறிப்பாக அத்தகு ஓவியத் துறையில் தமிழ்நாடு நெஞ்சு நிமிர்த்திப் பெருமை பேசத் தரும் அளவில் ஓவியக்கலை வல்லுநர் ஒருவர் நம்மிடம் உள்ளார் என்பதை உலகிற்கு அறிவித்தது கடந்த 26-ந் தேதி நடந்த பாராட்டுவிழா.

ஓவியக்கலை வல்லுநர் திரு. கே. மாதவன் அவர்களுக்கு அன்று நடந்த பாராட்டுக்கூட்டத்திற்கு நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். திரு. கே. மாதவன் அவர்களின் ஒப்பில்லாத் திறமை பற்றியும், நெஞ்சை அள்ளும் திறன் படைத்த அவரது ஓவியங்கள் பற்றியும் தோழர்கள். மு. கருணாநிதி, டி. வி. நாராயணசாமி, கே. ஏ. தங்கவேலு, சக்தி கிருஷ்ணசாமி, ஜி. உமாபதி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். திரு. டி. கே. சண்முகம் பொன்னாடை போர்த்தினார், ஓவிய வல்லுநருக்கு!

அடுத்து, அறிஞர் அண்ணா அவர்கள் தம் செந்தமிழ் வாழும் செந்நாவினால் 'ஓவிய மன்னர்' எனும் பட்டத்தை மாதவன் அவர்களுக்கு வழங்கி, கேடயத்தையும் தந்தார். ஓவியக்கலை பற்றி அண்ணா அவர்கள் அன்று வழங்கிய ஆய்வுரை, நிகழ்ச்சிக்கே ஒரு முத்தாய்ப்பாக விளங்கிற்று.

—புகைப்படம்: பாண்டியன் ஸ்டுடியோ, சென்னை—5.

என்று ஒருக்கணம் திகைப்பு. பிறகு பேசினாள்.

"உங்களை அந்தப் பாழ்மண்டபத்தில் பார்த்ததுமே பறிகொடுத்து விட்டேன்; என் உள்ளத்தை!"

பேசி முடித்ததும்தான் புரிந்தது என்ன பேசினாள் என்று! சொந்தக் குரல் இருக்கிறதா என்ற சோதனையில் புகுந்தவள், காதல் சோலையில் ஏன் நுழைந்தாள்? அப்படியானால் அவள் அந்த விறகுவெட்டியைக் காதலிக்கிறாளா? காதலிக்காவிட்டால் பாழ் மண்டபத்தில் வேறு யாரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தாள்?

அவனை நினைத்து அவளே வெட்கப்பட்டுக் கொண்டாள். அவள் தோள்மீது ஒரு கை பட்டது போன்ற உணர்ச்சி! அந்த உணர்வு கண்டு அவள் திடுக்கிட்டெழவில்லை. அப்படியே இருந்தாள். கை, அவள் தோளை அழுத்திப் பிடிப்பதுபோல் இருந்தது. அவளோ தோளை விடுவித்துக் கொள்ள முயலவில்லை. மாறாக, கையோடு பின்னுக்குச் சாய்ந்தாள். என்னமோ செய்தது அவளுக்கு. பலமான கரத்தின் அணைப்பில் இருப்பது போன்ற மயக்கம். கண்களை லேசாக மூடிக் கொண்டு அந்த உணர்வைச் சுவைத்தாள். பிறகு அவள் கரம் அசைந்து தோளின் பக்கம் சென்றது. தன் தோளைப் பிடித்திருக்கும் முரட்டுக் கரத்தை விலக்குவது போல் தடவி ரசிக்க அவள் மென் கரம் ஊர்ந்தது. தோளின் பக்கம் உயர்ந்தது!

சே! சே! என்ன அறிவீனம்! இதுவரை அவள் தோளைத் தழுவியிருந்தது மனிதனின் கரமல்ல; மரத்தின் கரம்! அவள் சாய்ந்திருந்த மரத்திலேயிருந்து விழுந்துவிட்ட கிளையின் அடிப்பாகம் அவள் தோள் மீதுபட்டு, கணநேரக் காதல் இன்பத்தை அவளுக்கு வழங்கி ஏமாற்றிவிட்டது.

யாரோ எதிரேயிருந்து அந்த இருட்டில் தன்னைக் கவனிப்பது போல முகத்தை மூடிக்கொண்டாள் முத்துநகை. விறகுவெட்டியின் நினைவு அவளை ஆட்டிப் படைத்தது. அவரை சந்தித்தால் அவரிடம் சொல்லி, காட்டில் உள்ள எந்த மரத்தை வெட்டினாலும் வெட்டுங்கள்; இந்த மரத்தை வெட்டாதீர்கள் என்று கூற வேண்டும் எனத் தீர்மானித்தாள்.

"என்ன? கூறவேண்டுமா? சரிதான்—அவருடன் பேசிவிடுவதா? அடி முத்துநகை! நீ வந்த காரியத்தை மறந்து விட்டு எந்தக் காரியத்தை எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்று லட்சிய முத்துநகை உறும ஆரம்பித்தாள். காதல் முத்துநகை வாயை மூடிக் கொண்டாள்.

"ஏனடியம்மா இந்த மரத்தை வெட்டக் கூடாது?"—லட்சிய முத்துநகை ஏகடியமாகக் கேட்டாள்.

"அவரைப் போலவே என்னைத் தொட்டு, எனக்கு அவரைப் பற்றிய எண்ணத்தை — புது உணர்வை — கணநேர இன்பத்தை — உண்டாக்கிய மரமல்லவா இது? அதன் நினைவாகத்தான் இந்த வெட்டக்கூடாது என்கிறேன்."—காதல் முத்துநகை பதில் கூறிக் கொண்டே துவண்டாள்.

"ஓகோ! அவ்வளவு தூரம் வந்துவிட்டதா? நீ யார்? அவன் யார்? புலவர்மகள் நீ—அவனோ மரம் வெட்டும் பாட்டாளி! நீ கொடி! அவன் கோடரி!"

"இருக்கட்டுமே. கொடிக்கும் கோடரிக்கும் பகை கிடையாதே! நான் மரமாக இருந்தால் அல்லவா பயப்பட வேண்டும்?"

"விறகு வெட்டியடி அவன்!"

"விரகதாபம் மேவுதடி அவன் மேல்!"

"லட்சியம் என்ன ஆயிற்று? அடி முத்துநகை; உன் லட்சியம் என்ன ஆயிற்று? காட்டாறுகள் குறுக்கிட்டாலும்—கரடி, புலி, சிங்கங்கள் எதிர்ப்பட்டாலும்—அஞ்சாது பயணம் நடத்துவேன், லட்சியம் நிறைவேற—என்று கூறிக் கிளம்பினாயே; அந்த லட்சியம் என்ன ஆயிற்று? காதல் குறுக்கிட்டதும் கருகி மண்ணாகப் போய்விட்டதோ?"

— காதல் முத்துநகை காதுகளைப் பொத்திக்கொண்டாள் இடியும் மின்னலும் படபடவென ஒலித்து பளபளவென மின்னி சற்று ஓய்ந்தன. 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள். எங்கிருந்தோ ஒரு சப்தம்! அந்தத் திக்கு நோக்கிச் செவிகளைத் திருப்பினாள். சிறிது தூரம் நடந்துசென்று பார்த்தாள்.

"டக்! டக்!" என்று நிறுத்தி நிறுத்தி அந்த ஒலியெழுந்தது. ஒலிவந்த பக்கம் மெதுவாக நடந்தாள். மரம் வெட்டும் சப்தந்தான் அது! இந்நேரத்தில் காரிருளில் யார் வந்து மரம் வெட்டப்போகிறார்கள் — ஒருவேளை அவராகத்தான் இருக்குமோ? சந்தேகத்துடன் முன்னேறிச் சென்றாள்.

வரவர ஒலி அருகே கேட்டது. ஒலிவரும் திசையில் விளக்கு வெளிச்சமும் தெரிந்தது. போவதா கூடாதா என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது முத்துநகைக்கு. தான் அருவிக்கரையிலிருந்து வெகு தொலைவு நடந்து வந்து விட்டோம் என்பதையும் உணர்ந்து மிகவும் பயந்தாள். இருந்தாலும் ஆசை விடவில்லை அவளை! இன்னும் சிறிது நடந்து போய்க் கவனிக்கலாம் என்றே தூண்டியது. ஒளிந்து ஒளிந்து வெளிச்சம் தெரியும் இடம் நோக்கிச் சென்றாள்.

தீப்பந்தம் ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதனருகேயுள்ள ஒருமரத்தைத்தான் யாரோ வெட்டிக் கொண்டிருந்தார்கள். தீப்பந்த வெளிச்சத்தில் அது யார் என்று அவளால் அவ்வளவு சுலபமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மரம் அரை பாகத்துக்கு வெட்டப்பட்டுவிட்டது என்பது மட்டும் அவளுக்குத் தெரிந்தது. காரணம், பந்தம் அடிமரத்துக்கு அருகே இருந்தது! அந்த ஒளியில் மரம் வெட்டப்படுவதை அவள் காணமுடிந்தது. வெட்டுகிறவன் வேறு பக்கம் திரும்பியிருந்தமையினால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏறத்தாழ உருவமெல்லாம் மண்டபத்தில் சந்தித்தவனைப்போலவே இருந்தது. ஆனாலும் அந்த ஆராய்ச்சியில் அவளுக்குத் தெளிவில்லை. மேலும் அருகே செல்வதா அல்லது அங்கேயே நின்று கவனிப்பதா என்று தெரியாது திகைத்துப் போனாள் முத்துநகை.

அவளுடைய சிந்தனை ஓடிக் கொண்டிருக்கும்போதே, மளமளவென்று மரம் முறிந்து கீழே விழத் தொடங்கியது. மரம் சாய்கிற பயங்கர சப்தம் அந்தக் காடு முழுதும் எதிரொலித்தது. முத்துநகை நடுங்கிவிட்டாள். வெட்டுண்ட மரமும் அவளை நோக்கியா சாய்ந்திட வேண்டும்? மரம் தன்மேல்தான் விழப்போகிறது எனக் கண்ட முத்துநகை, 'ஓ' வென்று அலறிக் கீழே விழுந்துவிட்டாள்.

பெண்குரல் கேட்டு மரம் வெட்டியவன் தீப்பந்தத்துடன் ஓடிவந்தான். நல்லவேளையாக மரம், அவளுக்கு மிக அருகாமையில் விழுந்துவிட்டது. கொஞ்சம் தவறியிருந்தாலும் முத்துநகையின் உடல் நொறுங்கிப் போயிருக்கும். தீப்பந்தத்தைக் கீழே சொருகிவிட்டு, அந்த மரம் வெட்டி அவளைத் தூக்கினான். அவளும் பயத்தோடு கண்களைத் திறந்து பார்த்தாள்.

"முத்தா! முத்தா! இந்நேரத்தில் எங்கு வந்தாய்?" என்ற வார்த்தைகளைக் கேட்டதும் அவளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. யாராயிருக்கும் என்று எதிர்பார்த்து வந்தாளோ அவனையே கண்டாள். அவனாக இருக்கக் கூடாதா என்ற அடங்காத ஆவலுடன் ஓடிவந்தவள், ஏன் அவனைக் கண்டோம் என்று பயந்தாள்.

"இந்நேரத்தில் ஏன் மரம் வெட்டுகிறாய்?" — முத்துநகை அவனைப் பார்த்துக் கேட்டாள். பெண் குரலிலே அல்ல; தான் புதிதாகக் கற்றுக் கொண்ட ஆண் குரலில்!

விறகுவெட்டியாக நின்று கொண்டிருக்கும் இருங்கோவேளுக்கு ஆண் குரலில் அவள் பேசுவதைக் கண்டதும் ஆச்சரியமாகப் போய்விட்டது. ஆச்சரியத்தை வெளிக்காட்டாமல், அவளைப் பார்த்து, "லட்சியம் நிறைவேறாமல் பேசுவது இல்லை என்றாய்; இப்போது பேசி விட்டாயே!" என்று கேட்டான்.

"என் லட்சியம் நிறைவேறும் நிலையில் இருக்கிறது. எப்படியும் வெற்றி எனக்குத்தான் என்று நிச்சயமாகிவிட்டது; அதனால் தைரியமாகப் பேச ஆரம்பித்து விட்டேன்!" என்று பதில் கூறினாள் முத்துநகை.

"உன் லட்சியமென்ன; இந்தக் காட்டுக்குள்ளேதான் உலவிக் கொண்டிருக்கிறதா?" — இருங்கோவேள் கேட்டான்.

"ஆமாம்!" என்றாள் அவள்.

இருங்கோவேள் அதற்குமேல் அதைக் கிளற விரும்பவில்லை. எப்படியும் தாமரை அவளை மர மாளிகைக்கு அழைத்து வரப் போகிறாள்; வந்த பிறகு சிறிது சிறிதாக அவளைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்ற முடிவில் பேச்சின் பாதையைத் திருப்பினான்.

"நல்லவேளை — முறிந்த மரம் உன்மீது விழவில்லை. நீ ஏன்யா இங்கு வந்தாய்?"

முத்துநகை, சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, "அதோ; அங்கேயிருக்கிற மண்டபத்தில் தூங்கிக் கொண்டிருந்தேன். யாரோ மரம் வெட்டுகிற சப்தம் கேட்டது. ஒரு வேளை நீ

[தொடர்ச்சி பக்கம்—12]

வாழ்க, வாழ்க! அரசியல் அறிவு!

'ஆபாச நூல்கள் பெருகிவிட்டன. ஆகவே தான் பிரான்சு நாட்டில் மந்திரி சபை மூன்று மாதம் கூட நிலைப்பதில்லை!'

—இப்படிக் கூறிய அரசியல் மேதை யார் என்று மலைக்கிறீர்களா? வேறு யாருமில்லை, திருமங்கலத்து ராஜாராம்தான்!

ஆபாச நூல்கள் பெருகியதால்தான் பிரான்சில் அரசியல் ஆட்டம் காண்கிறதாம்!

—ஐயோ பாவம்; கம்யூனிஸ்ட்டுகள் அதிக இடங்களைப் பிடித்திருந்ததால், மற்ற சில்லரைக் கட்சிகள் ஒன்றுசேர்ந்து மந்திரி சபையை அமைப்பதில் ஏற்படும்'தகராறுதான் மந்திரி சபை அடிக்கடி மாறியதற்குக் காரணம் என்பதை திருமங்கலத்தார் அறியவில்லை!

* ஆபாச நூல்கள் பெருகியதால் அரசாங்கம் மாறுகிறதென்றால் அந்த நூல்களின் உற்பத்தியிடமான அமெரிக்காவில் ஏன் நிலையான அரசு இருக்கிறது?

* நிர்வாண சங்கங்கள் வைத்திருக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளில் எப்படி நிலையான அரசாங்கம் இருக்கிறது?

இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்குமுன் அவரைக் கொஞ்சம் விழித்துக் கொண்டு அரசியல் செய்திகளைப் படிக்க வேண்டுகிறோம்!

பிரான்சில் மந்திரி சபை மாறியதெல்லாம் அந்தக் காலம்!

இப்போது சர்வாதிகாரம்!—அதாவது நிலையான ஆட்சி!

இவர் ஏன் இந்த சிக்கலில் மாட்டிக்கொண்டார் தெரியுமா?

* தி. மு. க. ஆபாச எழுத்துக்களை, நூல்களைப் பரப்புகிறது.

* அது ஆபத்து. ஏனெனில் நிலையில்லாத அரசை—பிரான்சு நாட்டில் இருப்பதுபோன்ற அரசை அந்த ஆபாச நூல்கள் ஏற்படுத்திவிடுமாம் இங்கு!

—அய்யோ; இவ்வளவு அதிகமான மேதைத் தன்மை உடலுக்கு ஆகாது! தி. மு. க. தமிழின் மரபுப்படி எழுதுவது, வட நாகரீக வாடையால்' ஜலதோஷம்' பிடித்தவர்களுக்குத் தான் ஆபாசம்! ஆபாசத்திற்குப் புராணப் புடவை போர்த்தியே பழக்கப்பட்டவர்களுக்குத்தான் ஆபாசம்!

எதையோ நினைத்துக் கொண்டுஅரசியல்மேதைத் தனத்தின் தரத்தைக் காட்டிக் கொள்கிறார், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்!

வாழ்க, வாழ்க, அரசியல் தலைவரின் அரசியலறிவு!

கலப்படம்

பூமாலையும் வேண்டும்; புன்னகையும் வேண்டும்!

காலை

மணி ஒன்பது! மந்திரி கண் விழித்தார்!! காலைக்கடன்களை முடித்தார்; சூடான காப்பி அவருக்காக ஹாலில் காத்திருந்தது; குடித்தார்! டிரைவரைக் கூப்பிட்டு 'சர்க்கார் தந்த காரை எடு' என்றார்! கார் பறந்தது, மந்திரியை ஏற்றிக் கொண்டு!

கோகுலர் கவிதை வெளியிட்டு விழாக்காரர்கள் மலர் மாலை மரியாதை செய்தார்கள்; காலை 'டிபன்' முடித்துக் கொண்டு கூட்டத்திற்கு வந்தார், கனம் மந்திரியவர்கள்! யார் யாரோ எதையெதையோ பேசினார்கள்.

மந்திரி பேசினார். ஒரே கை தட்டல்! (அதாவது ஒருவர் தான் கைதட்டினார், முதலில்!) பிறகு பெரும் கைதட்டல். முக மலர்ச்சியுடன் பேச ஆரம்பித்தார், மந்திரி:

"தலைவர் அவர்களே! நான் இன்னும் பல கூட்டங்களில் பேச வேண்டியிருப்பதால், கோகுலர் கவிதைகள் பற்றிச் சொல்ல முடியாதவனாய் இருக்கிறேன். ஆனால் ஒன்று சொல்வேன். (இந்த இடத்தில் மந்திரி கண்களில் சிவப்பு நிறம் தோன்றிற்று; உதடுகள் துடித்தன! உணர்ச்சிவயப்பட்டார், மந்திரி!)

இந்த நாட்டின்—அதாவது பாரத நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுங்கள். அப்படித்தான் கவிஞர்கள் பாடவேண்டும். நாட்டின் நாச சக்திக்கு இடம் கொடுத்துப் பாடவே கூடாது; நாட்டைத் துண்டுபோட நினைப்பவர்கள் ஒழிந்தால் ஒழிய நாட்டிற்கு விமோசனமில்லை!"

—மந்திரி பேசிக் கொண்டே திரும்பிப் பார்த்தார். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவரும், வட்டார காங்கிரஸ் கவுன்சிலருமான திரு. தேசியம் பிள்ளையின் முகம் மலர்ச்சி அடைந்தது. உடனே மந்திரி பேச்சை முடித்துக் கொண்டு புறப்பட்டார்.

* * *

மாவட்ட காங்கிரஸ்' அரசியல் மாநாட்டிற்குள் மந்திரியின் கார் நுழைந்தது! மாநாட்டு நிர்வாகிகள் வரவேற்றனர்! மாநாட்டில் மந்திரி பேசினார்:

"....இப்போது பலர் பலவிதமாக தி. மு. க—வின் தேர்தல் வெற்றியைப் பிரலாபித்துப் பேசினார்கள். அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? அவர்கள் சுய பலத்தால் ஜெயிக்கவில்லை—என்று நீங்கள் கருத வேண்டும். ஏதோ ஆளும் கட்சியாய் இருக்கும் நாம் தான் அவர்களுக்கு ஒரு தடவை வாய்ப்புத் தந்திருக்கிறோமே தவிர, அவர்களுக்கு வெற்றியுமல்ல; நமக்குத் தோல்வியுமல்ல!"

—என்று கூறிக் கொண்டே மாவட்டக் காங்கிரஸ் செயலாளரைப் பார்த்தார். அவரோ மந்திரியின் 'பெருமைப்' பேச்சைக் கேட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித் திண்டாடினார்! உடனே மந்திரி பேச்சை நிறுத்திக் கொண்டார்.

பகல்

மதியம் சாப்பாடு நடந்தது! அதில் பயிர்ச் சாப்பாடு - உயிர்ச் சாப்பாடு என இருவகை இருந்தது. (பயிர்ச் சாப்பாடு என்பது மரக்கறியுணவு! உயிர்ச்சாப்பாடு என்பது இறைச்சியுணவு! இது காங்கிரஸ் வட்டாரத்தில் வழங்கும் குழூஉக்குறிச் சொல்!) மந்திரி எந்த உணவுண்ணப் போனார் என்பது பலருக்குத் தெரியவில்லை! 'சத்தியமேவ ஜயதே' — எனும் அகிம்சை சுலோகம் பொறிக்கப்பட்ட காரில், ஒரு குச்சி ஒன்றைப் பல் விடுக்கில் வைத்த வண்ணம் மந்திரியவர்கள் விடு சென்று தூக்கத்திலாழ்ந்தார்!

மாலை

அவர் தூங்கியெழுந்ததும், புறப்பாடு! அந்தப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் நாலாவது படிவத்தைத் திறந்து வைத்தார், மந்திரி! அப்போது அவர்பேசிய பேச்சின் சாரம்:

"... மாணவர்கள் அந்தக் கட்சிக்கூட்டம், இந்தக் கட்சிக் கூட்டமென்று போகக் கூடாது. ஏனெனில் அக் கூட்டங்கள் படிப்பைப் பாழாக்கி விடுகின்றன. படிக்கும் போது அவையெல்லாம் எதற்கு? அவசியமில்லை! படிப்பை ஒழுங்காகப் படிக்க வேண்டும். அதற்காக சர்க்கார் — நம் காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவோ செய்கிறது. அதையெல்லாம் எதிர்க் கட்சிகள் எதிர்க்கின்றன. அவைகளின் பேச்சை யாரும் நம்பக் கூடாது. அதிலும் சினிமாவைக் காட்டி மயக்குகிறார்களே—அவர்களை நம்பவே கூடாது. இன்னும் சொல்லப் போனால் 21 வயது வராதவர்கள் சினிமாவே பார்க்கவே கூடாது!"—என்று கூறிக் கொண்டே அந்தப் பள்ளி நிர்வாகியைப் பார்த்தார்! கதர்க் குல்லாயுடன் அமர்ந்திருந்த அவர் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் ஓடின. உடனே மந்திரி பேச்சை முடித்துக்கொண்டு புறப்பட்டார்!

* * *

சிங்காரச் சோலைகள் சூழ்ந்த சினிமா ஸ்டுடியோவுக்குள் நுழைந்த மந்திரியின் காரை வரவேற்றன ஸ்டுடி பேக்கர் கார்கள்.

புதுப் படம் ஒன்றைத் துவக்கி வைத்தார் மந்திரியவர்கள். அந்தத் திரையுலக 'சூழ்நிலையில் அப்படியே புளகாங்கிதம் அடைந்து போனார் மந்திரியார்! யாரும் அழைக்காமலேயே பேசினார் அவர்:

"... எனக்கு இதையெல்லாம் பார்க்கும்போது நானும் நடிக்க வேண்டும் என்ற ஆசை மனதில் எழுகிறது. ஏனெனில் திரைப் படக் கலை நாட்டிற்குத் தேவையான கலை; தளர்ந்து போன மக்களுக்குத் தெம்பும் தெளிவும் ஊட்டுகின்ற கலை. இந்தக் கலைக்காகச் சேவை செய்பவர்கள் நாட்டின் தொண்டர்கள். ஆனால் ஏனோ அவர்கள் நாட்டைத் துண்டு போடும் இயக்கத்தை ஆதரிக்கிறார்கள். இது மாற வேண்டும்!..."

—பேசிக்கொண்டே அருகில் அமர்ந்திருக்கும் (புதுக் கதர்ச் சட்டை போட்ட) புதிய பட முதலாளியைப் பார்த்தார். அவர் புன்முறுவலித்தார். உடனே மந்திரி பேச்சை முடித்துக் கொண்டார்!

* * *

பொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார், மந்திரியார்! அந்த வழியில், முதலில் பேசிய பள்ளியைக் கடந்து சென்றார். இன்னும் அங்கு விழா நடந்து கொண்டிருந்தது. ஒருவர் பேசினார். '...கனம் மந்திரி அவர்கள் பேசினார்கள், மாணவர்கள் அந்தக் கட்சிக் கூட்டம், இந்தக் கட்சிக் கூட்டம்....என்று எங்கும் போகக் கூடாது." என்று! அது முக்காலும் உண்மை!—இந்தப் பேச்சு மந்திரியார் காதில் விழவில்லை, காரணம் கார் கன வேகத்தில் போய்க் கொண்டிருந்தது!

பொதுக் கூட்டத்தில் பேச ஆரம்பித்தார்.

"...நாட்டில் பலவிதமாகக் கூறலாம். அதை நீங்கள் நம்பக் கூடாது! அதிலும் தி. மு. க.காரர்கள் அழகாகப் பேசுவார்கள். அடுக்கடுக்காகப் பேசுவார்கள்! நம்பக்கூடாது! நம்பவேகூடாது! ஆபாசமாகப் பேசுவார்கள். அசிங்கமாகப் பேசுவார்கள் நம்பக்கூடாது; நம்பவே கூடாது!" ஏன் நம்பக்கூடாது என்பதற்குக் காரணம் கூற நினைத்தார்! ஆனால் ஏனோ கூற முடியவில்லை! "...பொது ஜனங்களுடன் காங்கிரஸ் தொண்டர்கள் நல்ல தொடர்பு கொள்ளவேண்டும். மற்ற எதிர்க் கட்சிகள் எப்படித் தொடர்பு கொள்கின்றன என்பதைக் காங்கிரஸ் தொண்டர்கள் நினைவுகொள்ளவேண்டும். முக்கியமாக இளைஞர்களை—அதிலும் முக்கியமாக மாணவர்களை நம் பக்கம் இழுக்கவேண்டும்...!"

கொஞ்ச நேரத்திற்கு முன் பள்ளியில் பேசிய பேச்சு நினைவிற்கு வந்தது. அதை மறப்பதற்கு கொஞ்சம் சோடா சாப்பிட்டார், மந்திரியார்!

"....அவர்கள் வடக்கு தெற்கு என்று பேசுகிறார்கள். வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது —என்பதெல்லாம் வெறும் அடுக்குமொழி அதில் உண்மை இல்லை—எள்ளளவும் உண்மையில்லை! வடக்குஅப்படியொன்றும் வாழவில்லை; தெற்குத் தேயவே இல்லை! நமக்கு வேண்டியதெல்

[தொடர்ச்சி பக்கம்—10]

அரசியல் காற்றாடிகளே; ஆடிக்காற்று வருகுது!

நோபல் பரிசு தனக்குத் தந்தாலென்ன?—என்ற குரல் எழுப்பினார், கவிஞர் பாரதியார் ஒரு தடவை. அதற்காகவென ஒரு புத்தகமும் எழுதினார்; கடிதப் போக்குவரத்துக்கள் நடந்தன. கடைசியில் அவருக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை!

இலக்கியத்திற்கெனத் தரப்படும் நோபல் பரிசுக்காக அவர் போராடினார். அவரிடம் திறமையிருந்தது; தகுதியிருந்தது. எனினும் அவருக்குக் கிடைக்கவில்லை, பரிசு!

ஆனால் இப்போதோ அரசியலுக்கான—அரசியல் தத்துவங்களுக்கான—புதுமைக் கருத்துக்களுக்கான பரிசு தமிழ்நாட்டார் ஒருவருக்குக் கிடைக்கும் போலிருக்கிறது!

அவர் திடீர் திடீரென விடும் அரசியல் வாணவேடிக்கைகள், தமிழ் நாட்டையே—ஏன்—உலகத்தையே கலக்கிக்கொண்டு வருகிறது!!

அவருடைய பேச்சைக் கேட்டு அறிஞர்கள் திகைக்கிறார்கள்!

அவருடைய விளக்கம் கேட்டு தொண்டர்கள் திணறுகிறார்கள்!

அவருடைய கருத்துரை கேட்டுப் பொதுமகன் தலையைச் சொறிகிறான்!

—அந்த அளவிற்கு அத்தனையும் அவருடைய சொந்தக் கருத்துக்கள்—தங்கக்கருத்துக்கள்!

ஆம்; நம் பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. ராஜாராம் அவர்கள் தான் மேற்கூறிய அத்தனை 'புகழாரங்களுக்கும்' உரியவர்.

குலதர்மக் கல்வித் திட்டத்தினால் பதவி பறிபோன ராஜாஜியின் மந்திரி சபையில் மந்திரி சுகம் அனுபவித்தவர்!

இப்போது...குலதர்மக் கல்வித் திட்டத்தைக் காட்டிப் பதவி நாற்காலியைப் பிடுங்கி அதில் அமர்ந்துக்கொண்ட காமராசர் அவர்களின் 'பிராஞ்ச் ஆபீஸாக' விளங்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியில் அமர்ந்திருப்பவர்!

விளம்பரம் தேடும் எண்ணத்துடனோ — அல்லது உதித்தெழுந்த உதய சூரியனாம் ஒரு பெரும் கழகத்தைத் தூற்றல் மொழி• எனும் மூடுபனியால் மறைக்கும் எண்ணத்துடனோ அவர் போகின்ற பக்கமெல்லாம்—ஏறுகின்ற மேடையெல்லாம்—வாய் திறக்கும் வாய்ப்பு நேருகிற போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை நினைக்காமலிருப்பதில்லை! அதன் வெற்றிகளைப்பற்றி விமர்சிக்காமலிருப்பதில்லை. விரிந்து பரந்து கிடக்கும் வானத்தை வட்டமிடும் கரிக்குருவி அளந்து பார்க்க எண்ணிய கதையைப் போல!

'சென்னை நகராட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் எப்படிக் கைப்பற்றியது தெரியுமா?'–என்ற ஒரு அருமையான கேள்விக் கணையை வீசுவார்! மக்கள் அந்தக் கேள்விக்கு விடை தெரியாது விழிப்பதாக நினைத்துக் கொண்டு!

'நான் சொல்கிறேன்; நான் சொல்கிறேன் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போட்ட அத்தனைபேரும் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள்!'—என்று கூறுவார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரும்பெரும் பணிகளை, அதனிடம் மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும் அவரது கட்சிக்காரர்கள், தங்கள் தலைவரின் கண்டுபிடிப்பு கண்டு திகைப்பார்கள்; திக்குமுக்காடுவார்கள்! 'இப்பேர்ப்பட்ட மூளை நமக்கெல்லாம் இல்லையே?'—என்று ஏங்குவார்கள்.

'ஒரு இலட்சம் பேருக்குமேல் சென்னை நகரில் மட்டும் 'நாட்டுச் சரக்கு'க் காய்ச்சுபவர்களாயிருந்தால், எத்தனை லட்சம் பேர் குடிக்கவேண்டும்? அத்தனை பேரை—அத்தனை குற்றவாளிகளை ஒரு நகரில் வைத்துக் கொண்டு இருக்கும் அரசாங்கம் திறமையுள்ள அரசாங்கமா? போட்ட மதுவிலக்குச் சட்டத்தை மீறுகின்ற இத்தனை பேரை வைத்துக்கொண்டுள்ள அரசாங்கம் ஆள்வதற்கு யோக்யதையுள்ள அரசாங்கம்தானா?' என்று சில காங்கிரஸ்காரர்கள் எண்ணினாலும் 'அரசியல் தத்துவ முதல்வரே' சொல்லிவிட்டார்—இனி நமக்கென்ன—என்றெண்ணி அடங்கிக் கிடப்பார்கள்.

அடுத்த கூட்டத்தில் பெருத்த அரசியல் வெடியொன்றை விடுவார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூட்டம் ஏன் சேருகிறது என்கிற ஆராய்ச்சியில் இறங்கி அடுத்த நிமிடமே அதற்கு விடையும் கூறிவிடுவார்.

'திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூட்டம் சேருவதற்குக் காரணம் என்ன தெரியுமா? அந்தக் கட்சித் தலைவரே கூத்தாடி; எனவே கூத்தாடியைப் பார்க்க மக்கள் கூடுவதில்லையா? அதுபோலத்தான், தி. மு. க-விற்குக் கூட்டம் சேர்வதும்!"

—கூறுகிறார் இவர் கூத்தாடிகள் நாமென்று!

சத்தியமூர்த்தி எனும் பெரும் காங்கிரஸ் தலைவர் ஒருவரிருந்தார், அந்தக் காலத்தில்! அவர் அரிதாரம் பூசி மேடையில் ஏறி கூத்தாடியுமிருக்கிறார். அந்தக் 'கூத்தாடித் தலைவ'ரின் நேரடிச் சீடர்தான் காமராசர்! காமராசர் விட்டெறிந்த பிச்சைக்காரப் பதவியிலேயிருந்து கொண்டுதான் ராஜாராம் நம்மைப் பார்த்துக் கூறுகிறார், கூத்தாடிகளென!

அந்தக் காலத்துக் காங்கிரஸ் கட்சி நாடகத்தையே தொழிலாகக் கொண்ட சுந்தராம்பாளின் இசையைக் காட்டித்தான் கூட்டம் சேர்ந்தது; அந்த நினைவை மறந்து நம்மைக் காய்ந்திருக்கிறார்; நம்மீது பாய்ந்திருக்கிறார் ராஜாராம்!

கோபியிலே மகாநாடு — காஷ்மீரத்துச் சீமான் நேருவின் புதல்வி இந்திரா காந்தி வருகிறார் — தேபர் வருகிறார்—என்றால் மட்டும் கூட்டம் சேராது. ஏதாவது ஒரு பெரிய சினிமா நடிகரைக் காட்டுவோம்; கூட்டம் கூட்டுவோம். அது கலைவதற்குள்ளே நம் பெருமையைப பறைசாற்றிக் கொள்ளலாம்' என்று திட்டமிட்டு, நாடகமாடிகளை நம்பி மாநாடு நடத்திய ராஜாராம்தான் ஏசுகிறார், நம்மைக் கூத்தாடிகளென்று!

நாடகத்திற்கும், நாடகப் பணிபுரிபவர்களுக்கும் தமக்குள்ள உறவை மறந்துவிட்டு-மறைத்துவிட்டு நாக்கு மாத்துவிடும் வண்ணம் தூற்றல் மொழியை அள்ளி வீசியிருக்கிறார்.

நாடகமாடுகிறோம்;. உண்மை!

நாட்டு மக்கள் கருத்து விளக்கம்பெற, பகுத்தறிவு குருத்துவிட, கறுத்த மடமை எண்ணங்கள் ஓட்டம் பிடிக்க நாடகமாடுகிறோம்!

முத்தமிழில் ஒரு பகுதித் தமிழாம் நாடகத் தமிழை வளர்க்கும் பொருட்டு நாடகமாடுகிறோம்.

முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்—எனும் தமிழ் நாடக நூல்கள் காலத்தால் மறைந்தாலும் ஞாலம் தரும் அறிவுகொண்டு புது நாடக நூல்கள் அமைவதற்கு நாடகமாடுகிறோம்.

நாடகமாடுகிற நோக்கம் பட்டம், பதவிக்கல்ல; புகழ்மாலை பூமாலைக்கல்ல; பவிசான வாழ்வுக்கல்ல என்பதை நம் கடந்த கால நாடக சரித்திரம்—தியாகத் தழும்புகள் படைத்த அச்சரித்திரம் உரக்கக் குரலெடுத்துப் பேசுவதைக் காணலாம்!

—அவருடைய 'கட்சி'யின் வரலாற்றையும் கழகத்தின் வரலாற்றையும் மறந்துவிட்டுக் கூத்தாடிகளெனத் தூற்றுவது மடமையிலும் மடமை!

—எதிர்க்கட்சிகளின் கொள்கையிலுள்ள தவறுகளைக் காணாது, வாய்க்கொழுப்பின் மிகுதியால் கூத்தாடிகளெனத் தூற்றுவோரே!

நல்ல கொள்கைக்காக நாடக மேடையேறியவர்களை: கூத்தாடிகள் என்றால்—நாள்தோறும் இரண்டு மூன்று தடவை சினிமாக் கொட்டகைகளில்—'செய்திப் பட'த்தில் வண்ண வண்ண உடைகளில் தோன்றி நடிக்கும் நேருவைப் 'பெருங் கூத்தாடி' என்று கூறிட எத்தனை நாழிகை செல்லும்? அவருடன் தோன்றும் 'குட்டிக் கதர்'குல்லாய்களை' எக்ஸ்டிரா கூத்தாடிகள் என்று கூறிட எத்தனை காலமாகும்?

' ஜனநாயக உலகம் காணாத அட்டூழியங்களைச் செய்து பதவியில் அமர்ந்திட வெறி கொண்டலையும் காங்கிரசை 'அரசியல் கூத்தாடிகளின் கூடாரம்'—என்று ஆதாரம் காட்டி குற்றம் சாட்டிட எத்தனை நாழிகை செல்லும்?

—திருப்பூர் அடியார்.



சுழல் விளக்கு

மாலுமி

பி. தண்டபாணி; திருப்பூர்.

(?) ஊழல் இல்லாத இலாகாவை நடத்துகிற டில்லி அமைச்சர் பெயரைக் கூற முடியுமா?

தேடிப் பார்த்தாலும் ஒருவருமே கிடைக்கவில்லை, இப்போது. முன்பு ஆச்சாரியார் இருந்தார்; ஆனால் அப்போது அவருக்கு 'இலாகா' கிடையாது!

டி. என். விமலநாயகி; மார்த்தாண்டவபுரம்

(?) அடுத்த சென்னை மாகில அமைச்சரவை சுதந்திராக் கட்சிக்குக் கிடைக்குமா?

ஆச்சாரியார் யார் என்பதை இந்த நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்று கருதுகிறீர்கள்? குலதர்மக் கல்வித் திட்டத்தின் மூலம் நாட்டு மக்களின் பெரும் பகுதியினரின் அறிவை விழுங்கி ஏப்பமிடக் காத்திருந்த அந்தக் கிழட்டுச் சிங்கத்தின் புதிய வேடத்தால் ஏமாறக் கூடியவர்கள் மிகவும் குறைந்துவிட்டார்கள், இங்கே!

எம். ரங்கராஜா; ராஜபாளையம்.

(?) பிரதமர் நேருவின் மன மாளிகை எப்படிப்பட்டது?

அலட்சியக் குழியிலே அகந்தை என்ற அடிக்கல் இட்டு—சோஷலிசச் சுவர் அமைத்து—காந்தீயச் சாயம் பூசி—கர்வக் கலசம் சுமக்கும் ஏகாதிபத்திய மெழுகு மாளிகை அது! கிட்ட வரும் நெருப்பை எத்தனை நாட்கள்தான விரட்டிக்கொண்டிருக்கும் அது; சீக்கிரத்தில் உருகி உறைந்து மண்மூடிப் போவதையும் பார்க்கத்தான் போகிறோம்!

எஸ். கே. வேலு; மேலூர்.

(?) இந்திய உள்நாட்டு இலாகா எப்படி இருக்கிறது?

உள்நாட்டு அமைச்சர் பந்தைப் போலவே தடியூன்றித் தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

"சந்திரகாசன்"; தேனாம்பேட்டை.

(?) சென்னையில் நடைபெற்ற கேரள கம்யூனிஸ்ட் ஆட்சியின் எதிர்ப்பு ஊர்வலம் எப்படி இருந்தது?

நீளமாகத்தான் இருந்தது! சென்னையிலே சினிமாக் கொட்டகையையும்—மெரினா கடற்கரையையும் தவிர, வேறு எங்குமே ஒன்று சேராதவர்கள் எல்லாம் அந்தச் சில மணி நேரம் ஒன்று சேர்ந்து சென்றார்கள்! மதப்பித்தேறிய ஆங்கிலோ இந்திய கிறித்துவர்கள் மேல்நாட்டுப் பாணியிலே உடையணிந்து சென்றார்கள்; காதி இலாகாவில் பணிபுரிகின்ற கதருடை தரித்த பெண்மணிகள் எல்லோரும் அழைத்துவரப்பட்டார்கள்; 'அரசியலில் ஈடுபடக் கூடாத' சின்னஞ்சிறு பள்ளி மாணவர்கள் இழுத்துவரப்பட்டார்கள்! ஊர்வலம் வெற்றி என்றுதான் சொல்லிக் கொள்கிறார்கள்; ஆனால், அந்தோ பரிதாபம்; 'கேரள எதிர்ப்புச் சகாய நிதி'யிலிருந்து பெரும் தொகை குறைந்து விட்டதாம், ஊர்வலத்தில் சென்றவர்களின் ஒரு நாளைய உணவுக்காகவும், செலவுக்காகவும்!

பி. செரியன்; சோரனூர்.

(?) தலைச்சேரி, கண்ணனூரில் பூமியதிர்ச்சி ஏற்பட்டதாமே....?

'கேரள ஜனநாயகக் கார்டியன்'களால் ஏற்பட்டிருக்கும் அரசியல் அதிர்ச்சியுடன், இயற்கை போட்டி போடுகிறதுபோலும்!

கே. சாமிநாதன்; விருதுநகர்.

(?) மைல்கற்களில் இந்தி எழுதினால், வடக்கே இருந்து வருகிற இந்திக்காரர்களுக்கு உதவுமே; இதை ஏன் எதிர்க்கிறீர்கள்?

வடக்கே இருந்து வருகிற வடவர்களின் வசதிக்காக இன்னும் என்னென்னவோ செய்யலாமே; இங்கிருப்பவர்கள் தங்களுடைய பெயரையும் இந்தி எழுத்தாலேயே நெற்றியில் சூடு போட்டுக் கொண்டால், வருபவர்கள் கேட்காமலேயே யார் என்று தெரிந்து கொண்டு விடலாமல்லவா?

டி. கஸ்தூரி; மாதுங்கா.

(?) நேருவின் அடுத்த வெளி நாட்டுப் பயணம் எப்போது?

அந்த "நாடாறு மாதம்; வெளிநாடாறு மாதம்" கதை கேரளத்திற்கு ஒரு முடிவு கண்ட பிறகுதான!

டி. கே. பக்தவத்சலம்; போடி.

(?) காங்கிரஸ் ஆட்சியில் கள்ள நோட்டுகள் அதிகம் நடமாடுகின்றனவே; ஏன்?

உண்மையான நோட்டுகள் எல்லாம் புதுக் காங்கிரஸ்காரர்களுடைய இரும்புப் பெட்டிகளுக்குள்ளேயே அடைபட்டுப் போய் விட்டனவே!

சி. கே. டி. கருணாகரன்; கண்டி.

(?) ஸ்டாலின், புல்கானின், குருஷேவ்—இம்மூவரில் யார் திறமை மிக்கவர்?

ஸ்டாலினைத் திறமையற்றவர் என்று புல்கானின் குறிப்பிட்டார்; புல்கானினைத் திறமையில்லாதவர் என்று குருஷேவ் குற்றம் சாட்டினார்; குருஷேவைப் பற்றி அடுத்து வருகிற சோவியத் 'சர்வாதிகாரி' தான் முடிவு சொல்ல வேண்டும்!

மா. பாலு; பாலக்காடு.

? பெரியாரின் இறுதித் திட்டம் எது?

நேற்று 'திராவிட நாடு' கேட்டார்; இன்று 'தமிழ்நாடு' கேட்கிறார்; நாளை 'கொங்குநாடு' கேட்பார்; மறுநாள் 'ஈரோடு' கேட்பார்; கடைசியில் எனக்கொரு 'வீடு' மட்டுமாவது கொடுங்கள்— என்று கேட்டாலும் கேட்பார்; யார் கண்டது?

கே. வேலுச்சாமி; ஜி. கே. ராமசாமி; ஒத்தைக்கால் மண்டபம்.

(?) நாம் சுதந்திரத் திராவிட நாடு காண எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்?

உங்களைப்போல் எத்தனை ஆயிரம் பேர் தினம் தினம் விடுதலைச் சேனையிலே சேருகிறீர்கள் என்பதைப் பொறுத்துத்தான் அந்தநாள் நெருங்கி வரும் தோழர்களே! ∴

பாலாற்றில்...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும், உலகத்தோடு இந்தியாவின் நிலைமையை சாலை வசதியில் ஒப்பிட்டு ஆராய்ந்தால் தென்னகம் அத்துறையில் வளர வேண்டிய அவசிய நிலைமையை நன்குணரலாம்.

	ஒரு லட்சம் மக்களுக்கு சாலை நீளம் மைலில்
அமெரிக்கா	2500
இங்கிலாந்து	392
பிரான்சு	934
இந்தியா	67

எனவே, மேற்கண்ட விவரத்தை எண்ணிப்பார்த்தால் தமிழகம் சாலை அமைப்பதில் நிறைய கவனம் செலுத்தவேண்டும் என்பதை நன்கு தெரியலாம். இந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பாராமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டுவது நல்லதல்ல.

சென்னை அமைச்சரவை ஐந்தாண்டுத் திட்டங்களில் உரிய விகிதத்தில் தொகை பெற்று தமிழகத்தை எல்லா நிலைமைகளிலும் முன்னேற்றங்காண ஆவன செய்யவேண்டும். அதற்குமாறாக பாலாற்றுப் பாலத்தை எடுத்துக் கொண்டு, சான்று காட்டி உண்மையை மறைக்க முயலுவது பெருந்துரோகமாகும். ∴

பூமாலையும்...

[8—ம் பக்கத் தொடர்ச்சி]

லாம் கிடைக்கிறது; நம்முடைய டில்லி சர்க்கார் எல்லோருக்கும் பகிர்ந்துதான் தருகிறது; தெற்குத் தேய்கிறது என்பதைப் பொது மக்கள் நம்பக் கூடாது!"

—இப்படிப் பேசிக்கொண்டே மண்டலக் காங்கிரஸ் கமிட்டிப் பொருளாளரும், வட்டிக் கடை முதலாளியுமான 'சேட்' பக்கம் திரும்பினார். சேட் மகிழ்ச்சி மிகுதியால் பற்களை வெளிக்காட்டினார். உடனே மந்திரி பேச்சை முடித்துக் கொண்டார்.

மந்திரி கார் பறந்தது. தென்னிந்திய தொழிலதிபர்கள்—வணிகர்கள் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அங்குதென்னிந்தியருக்கெனவடவரால் 'ஒதுக்கப்பட்ட' அநீதிகளை எடுத்துக் காட்டினார்கள்! அடுத்து மந்திரி பேசினார்.

"....ஆம், தென்னிந்தியா தொழிலில் பின்தங்கித்தான் இருக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கம் பலப்பல தொழில்களை இங்கு ஆரம்பிக்க வேண்டும். குறிப்பாக இரும்பு எஃகுத் தொழிற்சாலை ஒன்றை இங்கு ஆரம்பிக்க டில்லி சர்க்காரை வேண்டிக் கொள்கிறேன்."

—என்று கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தார் சம்மேளனக் கூட்டத் தலைவரை. **அவர் மகிழ்ச்சிப் புன்னகை பூத்தார். உடனே மந்திரி பேச்சை நிறுத்தினார்!**

கூப்பிட்டவர்கள் — கூட்டத்திற்கு அழைத்தவர்கள் மகிழ்ச்சியடைய—மன நிறைவு பெற—மந்திரி நம் பக்கம் என்று நினைக்கும்படி பேசிடுவதுதான் மந்திரிப் பதவி போலிருக்கிறது—என்று தன் 'சிறிய' அனுபவத்தை வைத்துக் கணக்குப் போட்டுக் கொண்டே கார் ஓட்டினான், டிரைவர்! ∴

கேரள நாட்டிலே கதர்வாலா-உன் கள்ளம் புரியுதய்யே கதர்வாலா!

அகிம்சாமூர்த்திகள் — சத்தியசிலர்கள் கேரளத்தில் நடத்தும் புனிதப் போராட்டத்திலிருந்து—சத்தியாக்கிரகத்திலிருந்து நாம் மிகத் துன்பப்பட்டுக் கற்றுத் தேறவேண்டிய பாடங்கள் கீழே பகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (போர் முறைக்கும் கோஷங்களுக்குமுள்ள ஒற்றுமையைக் கூர்ந்து கவனிக்கவும்)

போர் முறை

1. அப்பாவி மக்களை ஏற்றிச் செல்லும் சர்க்கார் பஸ்களை தீயிட்டுப் பொடிச் சாம்பலாக்குவது.
2. பலாத்காரமாக கலெக்டர் ஆபீஸில் கொடி நாட்டிக் கும்மாளம் போடுதல்.
3. உணவுக்கும் உடைக்கும் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு போரில் இறங்குதல்.
4. பள்ளிகளில் புகுந்து மேஜை, நாற்காலியை உடைத்தல்; பிள்ளைகளைப் புடைத்தல்; ஆசிரியர்களை உதைத்தல்!
5. போக்குவரத்துப் பாலங்களை உடைத்தல், படகுகளில் கல்வீசுதல் ரோடுகளில் பாறைகளை உருட்டி விடுதல்!
6. சர்க்கார் காரியாலயத்தில் தீ வைத்தல்!

ஊர்வல அட்டைகளும், கோஷங்களும்.

1. தனி மனிதனின் சுதந்திரத்திற்குத் தீயிடும், பயங்கரக் கம்யூனிஸ்ட்டுகள்.... ஆட்சி ஒழிக!
2. ஆளும்வெறி தலைக்கேறிய பலாத்காரவாதி ஈ. எம். எஸ்...ஒழிக!
3. அரிசியும் வேண்டாம்; துணியும் வேண்டாம்; ஈ. எம். எஸ். ஒழிந்தால் போதும்!
4. பள்ளியை அழிக்கும், பிள்ளைகளை — குஞ்சுகளைச் சுட்டுத் தள்ளும் அசுர ஆட்சி....ஒழிக!
5. தேச நாசத்தில் பிறந்து வளரும் அராஜக ஆட்சி...அடியோடு ஒழிக!
6. எங்கள் இயக்கம்.... அகிம்சா இயக்கம்!

அகிம்சா—சத்தியாக்கிரகப் போர் வாழ்க; வாழ்க!
அவர்கள் சொல்லுக்கும் செயலுக்குமுள்ள ஒற்றுமை
வாழ்க; வாழ்கவே!

மு. கருணாநிதி எழுதும் "மாடி வீட்டு ஏழை!"

தோழர். மு. கருணாநிதி கதை வசனம் எழுதும் "மாடி வீட்டு ஏழை" என்ற திரைப்படம் ஒன்று விரைவில் துவங்க இருக்கிறது. 'வானம்பாடி பிக்சர்ஸ்' என்ற புதிய நிறுவனத்தினர் அதைப் படமாக்குகிறார்கள்.

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை வைத்துப் பின்னப்பட்டிருக்கும் இக்கதை முற்றிலும் புதிய முறையில் அமைந்திருக்கிறது. பிரதம பாகத்தில்— மாடி வீட்டு ஏழையாக நடிக்க சிவாஜி கணேசன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்.

இப்படத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஏ. காசிலிங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இசையமைக்கும் பணி கே. வி மகாதேவனுடையது. ஒளிப்பதிவை துரை கவனித்துக் கொள்கிறார்.

ஆகஸ்ட் 21-ம் தேதி மரகதம்!

பட்சிராஜாவின் 'மரகதம்' ஆகஸ்ட் 21—ல் வெளிவருகிறது என்று இறுதியாக அறிவித்திருக்கிறார்கள். மாறன் திரைக்கதை வசனம் அமைத்திருக்கும் இக்கதை, சென்ற இரண்டாண்டு காலமாக கோவை பட்சிராஜா ஸ்டுடியோவிலே தயாராகிக் கொண்டிருந்தது.

சிவாஜி கணேசன், பத்மினி, டி. எஸ். பாலையா, சந்திரபாபு, டி. எஸ். துரைராஜ், ஓ. ஏ. கே. தேவர் போன்ற தமிழகத்தின் முதன்மை நடிகர்கள் நடித்திருக்கும் இப்படத்தை வெற்றிப்படமாக்கியிருக்கிறார் தயாரிப்பாளர் எஸ். எம். எஸ். நாயுடு. படத்தின் டைரக்டரும் அவர்தான்!

முதற் படம்

சுபாஷ் மூவிஸ் நிறுவனத்தினர் தயாரிக்கும் முதற் திரைப்படத்தில், நடிகர்கள் டி. ஆர். ராமச்சந்திரன், மலையாள நடிகர் சத்யன், தாம்பரம் லலிதா முதலியோர் நடிக்கின்றனர். இப்படத்திற்கான கதை வசனத்தை சக்தி கிருஷ்ணசாமி எழுதுகிறார்.

பிரதமர்களின் பட உலகம்!

அரசாங்கத் தலைவர்களாய் — பிரதமர்களாய் இருப்பவர்கள் கூட படவுலகில் புகுந்து தங்கள் திறமையைக் காட்ட தவறுவதில்லை. அண்மையில் மலேயாவின் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தன் நாட்டுப் பண்பை அப்படியே படம் பிடித்துக் காட்டும் பணியில் இறங்க எண்ணி அதற்கு ஏற்றதொரு துறை, திரையுலகம்தான் எனத் தேர்ந்தெடுத்து, கதை, வசனம், ஆடையணிமணிகள் பொறுப்பனைத்தையும் அவரே ஏற்றுக்கொண்டார். காரணம், சிறிதும் கலப்பற்று, தம்நாட்டுப்பண்பை படத்தில் காட்ட எண்ணினாராம்.

அதற்கான முயற்சிகளில் முழு மூச்சுடன் இறங்கினார். நாட்டின் பிரதமர் ஒருவர், சிலரால் 'நாசகால உலகம்' என வர்ணிக்கப்படும் படத்துறையில் ஈடுபடுவது கண்டு உலகு ஆச்சரியமுற்றது!

அவரது அடிச்சுவட்டை அண்மையில் முன்னாள் அரசாங்க முதல்வர் ஒருவர் பின்பற்றுகிறார். ஆம்; பிறைக்கொடியேந்திய பாக்கிஸ்தானத்து பிரதமராய் இருந்த சுஹரவர்த்திதான் அவர்!

அரசியல் உலகில் வீசிய ராணுவப்புயலின் காரணமாக கீழே விழுந்த செல்லாக்காசுகளில் ஒருவரும், அவாமி லீக் கட்சித்தலைவருமான அவர், தன் அரசியல் வாழ்விற்குப் பிரியாவிடை தந்துவிட்டு, படத்தொழிலில் இறங்கியிருக்கிறார். படத்தயாரிப்பாளராக மாறி ஒரு திரைப்படத்தை வெளியிடுவதற்கான முயற்சியில் அல்லும் பகலும் பாடுபடுகின்றாராம்! அரசியல் உலகில் தோல்வி கண்டாலும், அந்த உலகிலாவது வெற்றியடையவேண்டும் என அவருடைய பேதை நெஞ்சம் எண்ணுவதில் தவறொன்றுமில்லையே!

வெல்சின் படம்!

சமூகத்தையும், சரித்திரத்தையும் பின்னணியாக வைத்துத்தான் எல்லாக் கதையாசிரியர்களும் தங்கள் கற்பனையோவியங்களைத் தீட்டுவர். ஆனால் விஞ்ஞானத்தை — அதன் மாபெரும் வளர்ச்சியை மையமாகக் கொண்டு எழுதுவோர் ஒரு சிலரே!

அந்த சில எழுத்தாளர்களிலும் தலைசிறந்து விளங்குகின்றவர் எச். ஜி. வெல்ஸ் எனும் மேலைநாட்டு ஆசிரியர்! அவர் அப்படித் தனிப்புகழ் பெறுவதற்குக் காரணம், மற்றபிற எழுத்தாளர்களைப் போல் இறந்தகால, நிகழ்காலங்களில் அவருடைய கதா நாயகர்களை நடமாடவிடமாட்டார்! எதிர்காலத்தில்தான் அநேகமாக அவருடைய கதாநாயகர்கள் உலவுவார்கள். இத்தகு பெருமைபெற்ற அவருடைய கதையொன்றை எம். ஜி. எம். ஸ்தாபனத்தார் எடுக்கத் திட்டமிட்டுள்ளனர். வெல்ஸின் கதை நடக்கும் காலம் 8 லட்சம் வருடங்களுக்குப் பிறகு — அதாவது எதிர்காலத்தில் மனிதன் இவ்வுலகில் எப்படி வாழ்க்கை நடத்துவான் என்பதை விஞ்ஞானக்கண்ணோட்டத்துடன் அத்திரையோவியம் நமக்குக் காட்டுமாம்!

'ஹவுஸ் புல்'

'கொட்டகை நிரம்பிவிட்டது!' —என்ற பலகையைக் கண்டவுடன் வெறுப்புடன் வீடு திரும்பும் காட்சியை தென்னகத்து நகரங்களில் - குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் காணலாம்! ஆனால் மேற்கு ஜெர்மனியில் ஒரு நாளாவது 'கொட்டகை நிரம்பிவிட்டது'—என்று பலகை மாட்ட முடியவில்லையே என வருந்தும் கொட்டகைக்காரர்கள்தான் அதிகமாம்! காரணம், அந்த நாட்டு சினிமாத் தியேட்டர்களில் 30 சதவிகித இடங்களே நிரம்புகின்றனவாம்! வீட்டில் வசதியாக, குடும்பத்துடன் டெலிவிஷன் நாடகம் பார்க்கும் வசதியிருக்கும்போது கொட்டகைக்குள் அடைந்து கொண்டு சினிமாவைப் பார்க்க யாருக்குத்தான் ஆவல் பிறக்கும்? அதுவும் தவிர அதிகமான கொட்டகைகளும் அதிகமாக வெளியாகும் திரைப்படங்களும் அந்நாட்டில் இருப்பது ஒரு காரணமாம்!

திரையுலகின் அற்புத சாதனை!

சாதாரண திரையிலிருந்து கனபரிமாணப் படங்கள் வந்தன, திரைப்பட நுணுக்க ஆராய்ச்சியின் பலனாய்! அது ஒரு பரபரப்பை நம்மிடையே ஏற்படுத்தியது. சிவப்பும் பச்சையுமான கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்க்கும்போது நம் முன்னாலேயே கதை நடப்பது போலிருந்தது. படத்தில் பாய்கின்ற சிங்கம் தம்மீது பாய்வதாகக் கொண்டு அலறி ஓடிய ரசிகர்கள் எண்ணிலர்!

இந்தத் தொழில் நுணுக்க முன்னேற்றம் டெக்னேரமா, விஸ்டாவிஷன் எனும் படிகளேறி சினிமாஸ்கோப்பாக வந்து நின்றது. அகலத் திரைகளில் மிகப் பெரிய உருவங்களைக் காணும் வாய்ப்பைப் பெற்றோம்.

75 அடி அகலத்தில் 26 அடி உயரமுள்ள திரையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் இப்போது. அத்திரையில் மற்ற திரைகளை விட மிக மிகத் தெளிவான முறையில் படம் தெரியுமாம். இந்த முறைக்குப் பெயர் சினிரமா! இம்முறையின்படி படத்தில்வரும் ஒருவர் இடது புறத்திலிருந்து பேசிக்கொண்டே தோன்றுகிறார் என்றால், ஒலியும் அவரிடத்திலிருந்தே புறப்படும். அவர் வலது புறமாக மறைகிறார் என்றால் ஒலியும் வலது புறத்தில் தேய்ந்து மறையும்! இம்முறை விரைவில் நம் நாட்டிற்கும் வரவிருக்கிறதாம்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இசைக் கருவியும் கையுமாக இப்படித் தோன்றுவது, சரோடி பிரதர்சாரின் 'கலையரசி' திரைச் சித்திரத்தில்.

மறைவு

நீண்டகாலத் திரையுலகத் தொடர்புடையவரும், பல ஆண்டு காலமாக பிரபாத் திரைப்படக் கொட்டகை நிர்வாகப் பொறுப்பினைத் திறம்பட ஏற்று நடத்தியவருமான திரு. கண்ணபிரான் அவர்கள் 23-7-59—ம் நாள் இயற்கையெய்தினார் என்ற சேதி அறிந்து மிகவும் வருந்துகிறோம். தந்தையைப் பிரிந்துவாடும் மோகன் ஆர்ட்ஸ் உரிமையாளர் திரு. மோகன் அவர்களுக்கும், சுற்றத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரோமாபுரிப் ...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

தான் வெட்டுவாய் என்று நினைத்து வந்தேன். ஆமாம்... உனக்கு இரவில்தான் மரம் வெட்டுகிற தொழிலா? திருட்டுத்தனமாக வெட்டுகிறாயா?" என்று கேட்டாள்.

மிக சாமர்த்தியமாக ஆண் குரலில் பேசுகிறாள் என்பதை ரசித்துக்கொண்டே நின்ற இருங்கோவேள் 'ஆமாம்' என்று தலையசைத்தான். அவளை மறுமுறையும் சந்திக்க வேண்டும் என்ற ஆவலில்தான் அவன் வந்திருக்கிறான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? தாமரை அவளை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டால் மீண்டும் சந்திக்க முடியாமல் போய் விடுமோ என்ற சந்தேகத்தில் தான் அதற்குள் ஒரு தடவை பார்த்துவிட வேண்டுமென்று ஓடிவந்திருக்கிறான். அவனுக்கு நன்றாகத் தெரியும், அவள் அருவிக்கரையில் உட்கார்ந்திருந்தது. ஆனாலும் மண்டபத்தில் படுத்திருந்ததாக அவள் சொன்ன பொய்யை நம்பியதுபோல் நடித்தான். அருவிக்கரையில் அவள் இருந்ததைப் பார்த்துக்கொண்டேதான் மரம் வெட்டும் இடத்துக்கு வந்து சேர்ந்தான். அவள் கவனத்தைக் கவருவதற்காகவே மரம் வெட்டுவதுபோல் பாசாங்கும் செய்தான். மரமும் விழுந்தது. அவளும் வந்து அவன் வலையில் விழுந்து விட்டாள். இருங்கோவேள் அந்த இரவு அவளிடம் எதுவும் பேசாமல் பிரிந்து விடலாம் என்ற எண்ணத்தில் வரவேயில்லை. அவள் பெண்தான் என்பதைத் தான் புரிந்து கொண்டதாகக் காட்டி இன்ப உரையாடல்கள்—இனிய சுகம்—ஆகியவற்றுடன் அந்த இரவை வழி அனுப்பி வைக்க வேண்டுமென்று துடிதுடித்துத்தான் அவன் அங்கு வந்தான். ஆயினும் அவனால் அவளுக்கு எதிரே அந்தத் துணிவைப் பெற முடியவில்லை.

"மரத்தை நாளைக்கு விறகாகப் பிளந்து கொள்கிறேன்; கொஞ்ச நேரம் தூங்கலாம் — வாய்யா மண்டபத்துக்குப் போகலாம்!" என்று முத்துநகையை அழைத்தான்.

"இல்லை; நான் வரவில்லை!" என்றாள் அவள்.

"அட சரிதான் 'வாய்யா!' என்று கையைப் பிடித்து இழுத்தான் இருங்கோவேள்.

"ஊஹூம்...எனக்கு வேலையிருக்கிறது."

"ராத்திரியிலே என்ன வேலை? எல்லா வேலையும் காலையிலே பாத்துக்கலாம். மழை வேற வரப் போவுது. வாய்யா போகலாம்!" என்று மறுபடியும் இழுத்தான் இருங்கோவேள்.

அவன் சொன்னதற்கேற்றவாறு மழைத்தூறலும் விழுந்தது. இடியொலியும் பலமாக இருந்தது.

" பாத்தியா — மழையே வந்துட்டு! வாய்யா வா!" என்று அவசரப்படுத்தி, தீப்பந்தத்தையும் கையிலே எடுத்துக்கொண்டு அவளையும் இழுத்துக்கொண்டு கிளம்பினான். எதுவும் பேச இயலாது அவளும் அவனுடன் போனாள். என்ன செய்வது; போகவும் ஆசை—போனால் என்ன ஆகுமோ என்ற பயமும் கூடவே—இருப்பினும் அவனுடன் சென்றாள். இருவரும் மண்டபத்திற்குள் நுழைவதற்கும் மழை பலமாக ஆரம்பமாவதற்கும் சரியாக இருந்தது. அருவிக்கரையில் கட்டப்பட்டிருக்கும் குதிரையைப் பற்றி அவளுக்குக் கவலை ஏற்பட்டது.

"என்னய்யா யோசிக்கிறே?" என்று முதுகில் ஒரு தட்டுத் தட்டினான் இருங்கோவேள்.

"ஒன்றுமில்லை!" என்று அவள் சமாளித்துக் கொண்டாள். "இப்படி இராப்பகல் கஷ்டப்பட்டு விறகு வெட்டி வேலை செய்கிறாயே; உனக்கு என்ன கிடைக்கும்?" என்றாள் அவனைப் பார்த்து.

தீப்பந்தத்தை நன்றாக எரிய விட்டவாறு அவன் பதில் கூறினான்; "கஷ்டமில்லாமல் வயிற்றுக்குக் கிடைக்கும்." என்று!

"உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்றாள் முத்துநகை.

இந்தக் கேள்வியை அவசரப்பட்டுக் கேட்டுவிட்டாள். ஆனால் கேள்வி கேட்டு முடிவதற்குள்ளாகவே அவள் உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது.

"இன்னும் ஆகவில்லை — இந்தக் கட்டைக்கு ஏனய்யா கல்யாணம்? அது சரி; உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா? பிள்ளை எத்தனை? பெண் ஜாதி உன்னைப் போலவே அழகிதானா?" என்று கேள்விகளை மளமளவென அடுக்கிக் கொண்டே போனான் இருங்கோவேள்.

"ஊஹூம்....கல்யாணம் ஆகவில்லை." என்றாள் முத்துநகை.

"அப்படின்னா நம்ப ரெண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்ளலாமா?" இருங்கோவேள் குறும்பாகக் கேட்டான்.

"என்னது? நம்ப ரெண்டு பேருமா?"—முத்துநகை ஆச்சரியமும் திகிலும் அலை மோத வினா எழுப்பினாள். அத்துடன் உள்ளுக்குள்ளே ஒரு புளகாங்கிதம்!

"சே...சே...ஆம்பளையும் ஆம்பளையுமா கல்யாணம் பண்ணிக்கிறது? அதாவது நீ ஒரு பெண்ணையும், நான் ஒரு பெண்ணையும் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்டேன்யா!" என்று மழுப்பினான் இருங்கோவேள்.

முத்துநகை சிரித்துக் கொண்டாள்.

"சரி; தூங்கலாம்!" என்று இருங்கோவேள் அவளிடம் கூறினான்.

முத்துநகையும், இனிமேல் பேசுவது ஆபத்து என்று கருதி தூங்கலாம் என்று பதிலுரைத்துவிட்டு மண்டபத்தில் ஒரு பக்கத்தில் படுத்துக் கொண்டாள். அவளுக்கு எழுந்த உணர்ச்சிகள் அவளை மிகவும் பயமுறுத்தின. ஏதாவது விபரீதம் ஏற்பட்டுவிடுமென்று நடுங்கினாள். தூங்குவதுபோல் பாசாங்கு செய்து அவன் தூங்கியதும் ஓடிவிடலாமென்று திட்டம் போட்டாள். இப்படிப் பயப்படுகிறவள் பிறகு எதற்காக வருகிறாள்? ஆசை வெட்கமறியுமா என்ன? அவளுக்கு அருகிலேயே அவனும் படுத்துக் கொண்டான். அதை அவள் எப்படித் தடுக்க முடியும்? தடுத்தால், தான் பெண் என்ற உண்மையைச் சொல்லியாக வேண்டும். மூச்சைப் பிடித்துக் கொண்டு எதுவும் பேசாமல் தூங்குவதுபோல் நடிக்க ஆரம்பித்தாள் இருங்கோவேளுக்குத் தூக்கம் வருமா, என்ன?

"சே சே சே! இந்த வெளிச்சம் வேற தூக்கத்தைக் கெடுக்குது!" என்று முணுமுணுத்தவாறு எழுந்து தீப்பந்தத்தை அணைத்து விடாமல் மண்டபத்திலுள்ள இடிந்த சுவற்றுக்குப் பின்புறம் கொண்டு போய் வைத்தான். பிறகு வந்து அவளுக்கருகே படுக்கப் போனான்.

"கொஞ்சம் விலகியே படு! இல்லாவிட்டால் எனக்குத் தூக்கம் வராது!" என்றாள் அவள்.

"சரி! சரி! தூங்கு!" என்று கூறியவாறு சிறிது விலகிப் படுத்துக் கொண்டான்.

இருவரும் தூங்குவதுபோல் நடித்துக் கொண்டிருந்தனர். இப்படிச் சிறிது நேரம் கழிந்தது. முத்துநகையின் கால் பக்கம் ஏதோ ஊர்வதுபோல் ஒரு உணர்ச்சி. அப்படியே அசைவற்றுப் படுத்திருந்தாள். அவனுடைய கால்விரலாகத்தான் இருக்கும் என்று நினைத்தாள். நெஞ்சு "திக் திக்" என்று அடித்துக் கொண்டது. காலில் ஊர்ந்த பொருள் வழ வழ என்று தெரிந்தது.

"அய்யோ! பாம்பு! பாம்பு!" என்று அலறியடித்து ஓடிப்போய் இருங்கோவேளை இறுகக் கட்டிக் கொண்டாள்.

"எங்கே? எங்கே?" என்று அவன் கேட்கிறானே தவிர, ஓடிப்போய்த் தீப்பந்தத்தை எடுத்து வருவோம் என்ற எண்ணம் அவனுக்கு வரவேயில்லை. எப்படி வரும்? அவளல்லவா அவனை அணைத்துக் கொண்டு இருக்கிறாள்? பிறகு, அவளே தன்னை விடுவித்துக் கொண்டதும் தீப்பந்தத்தை எடுத்து சுற்றுமுற்றும் பார்த்தான். பச்சைச் செடியுடன் அவன் கொண்டுவந்து போட்ட அதே பாம்புதான் அங்கே ஊர்ந்து ஓடிக்கொண்டிருந்தது. வேகமாக ஓடி அதன் வாலைப்பிடித்து கர கர வெனச் சுற்றி மண்டபத்துத் தூணில் அடித்தான், பாம்பு செத்து வீழ்ந்தது.

"ம்! வீராதி வீரனே! பயப்படாமல் படய்யா!" என்று அவளைத் தட்டிக் கொடுத்தான்.

"ஊஹூம்!...எனக்கு பயமாயிருக்கு...நான் போகிறேன்." என்றாள் முத்துநகை.

"இதோ. வெளிச்சத்தை இங்கேயே வைக்கிறேன்—பயமில்லாமல் தூங்கு!" என்று தீப்பந்தத்தை அங்கேயே வைத்தான்.

தானும் படுத்துக் கண்ணை மூடிக்கொண்டான். வெளியே மழை பொழிந்து கொண்டிருந்தது. கண்மூடித் தூங்குவதுபோல் படுத்திருந்த முத்துநகையின் தலைப்பாகையில் அவன் கை பட்டது. அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாம்பைக் கண்டு பயந்து அவனை அணைத்துக் கொண்டதை நினைத்து நினைத்து நெஞ்சில் இனிப்பேற்றிக்கொண்டு படுத்திருந்த அவளுக்கு மேலும் ஒரு நெருக்கடி!

தலைப்பாகையில் பட்ட அவன் கையைப் பிடித்து, "என்ன இது" என்றாள் அதட்டலாக!

"அட ரொம்பக் குளிருதய்யா; தலைப்பாகைத் துணியைக் கொடு—உடம்புக்குப் போர்த்திக்கிறேன்" — என்று சொல்லிக்கொண்டே அவள் தடுத்தும் கேளாமல் அவளது தலைப்பாகையை அவிழ்க்கத் தொடங்கினான் இருங்கோவேள்.

● மாணவருலகத்திற்கு விழியோட்டி—வழி காட்ட வேண்டியது பள்ளி நூல்களே! அத்தகைய நூல்களில் கற்றோர் கண்டு வருந்தத்தக்க பிழைகளைப் புகவிடலாமா? தமிழகத்து மாணவர்களின் எதிர்காலத்தை அதிகாரத்தால் நிர்ணயித்துக்கொண்டிருக்கும் சென்னை அரசினர் அத்தகைய பிழைகளை 'வருக, வருக' என்று வரவேற்பது கொடுமையிலும் கொடுமை! பள்ளி இறுதித் தேர்வுக்காக அரசினர் வெளியிட்டிருக்கிற தமிழ்ப் பாட நூலில் எண்ணற்ற பிழைகள்! தவறுகள்! தமிழ்க் கொலைகள்! அவைகளை விளக்கித் திருத்தும் கட்டுரை....

பிழைகள் மலிந்த பள்ளி இறுதிப் பாடநூல்

புலவர் குழந்தை எழுதுகிறார்.

முத்தாரம்

இதழ் 29

ஆகஸ்ட் முதல் வாரம் கிடைக்கும்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு